*1 -* **தேவனுடைய கரம்**

*சங்கீதம் 8 : 1 – 4*

***தற்போதைய கணிப்புப்படி சுமார் 100 – 200 கேலக்ஸிகள் பிரபஞ்சத்தில் உள்ளன ஒவ்வொன்றிலும் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. ஒரு ஜெர்மனிய கம்ப்யூட்டரின் கணிப்புப்படி சுமார் 50000 கோடி நட்சத்திரங்கள் உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது நாம் ஒரு நொடிக்கு ஒரு நட்சத்திரத்தை எண்ணினால் கூட அதை மொத்தம் எண்ணுவதற்கு 2500 ஆண்டுகளாகும். அப்படியென்றால் பிரபஞ்சம் என்பது எவ்வளவு பெரியது!***

***வ- 3. நம்முடைய பரலோக பிதாவின் விரல்களின் கிரியைகளாகிய இந்த பிரபஞ்சத்தை பற்றி அறிந்து கொள்ளும்போது நமக்கு பிரம்மிப்பாக இருக்கிறது. அப்படியென்றால் அவருடைய கரம் எப்படியிருக்கும்? அவருடைய வல்லமை எப்படிப்பட்ட்து?***

*ஏசாயா 41:10 கோடிக்கணக்கான நட்சத்திரங்களை தம்முடைய விரல்களால் வைத்த தேவனுடைய கரம் நம்மை தாங்கிக் கொண்டிருக்கிறதை நினைத்துப் பார்க்கும் போது எப்படி இருக்கிறது! நாம் எதற்க்கும் பயப்பட தேவையில்லை!*

*நாம் தொடர்ந்து "தேவனுடைய கரம்" என்ற தலைப்பில் கற்றுக் கொள்ளப்போகிறோம். அது நம்முடைய சர்வ வல்லமையுள்ள தேவன் மேலுள்ள விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் வளருவதற்கு உதவி செய்யும்.*

*யாத்திராகமம் 6:6-7*

*இஸ்ரவேல் ஜனங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தனர் . எகிப்தியர்கள் மிகவும் பெலனுள்ள தேசமாக இருந்து இஸ்ரவேல் ஜன்ங்களை நெருக்கினார்கள். இஸ்ரவேல் ஜனங்களுடைய சொந்த முயற்ச்சியால் விடுதலை பெற்றிருக்க முடியாது. தேவன் தம்முடைய இரக்கத்தினால் அவர்கள் மேல் மனதுருகி மீண்டுவர வாக்குதத்தம் செய்தார் .*

*தேவன் தம்முடைய ஓங்கிய கையினாலும் அற்புதங்களாலும் எகிப்திற்கு விரோதமாக 10 வாதைகளாலும் மற்றும் செங்கடலை பிளந்தும் அவர்களை எகிப்திலிருந்து விடுவித்து வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்து சென்றார்.*

*அதன் பின்பு அவர்களுக்கு வேற தேவர்கள் இல்லை என்று நினைவுபடுத்தி தெரிந்து கொள்ள செய்தார் .*

*உபாகமம் 4:34*

*உபாகமம் 5:15*

*ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்பு இன்றும் இந்த வசனங்கள் நமக்கும் வாக்குத்த்தங்களாக இருக்கிறது.*

*உபாகமம் 7:19*

*தேவனுடைய கரம் உங்கள் மேல் இருப்பதையும் அவருடைய அன்பு இன்றும் மாறாமல் இருப்பதையும் உங்களால் நம்ப முடிகிறதா? தேவனால் இன்றும் உங்கள் வாழ்க்கையில் நம்பமுடியாத அற்புதமான காரியங்களை செய்ய முடியும். நாம் அவருக்கு பயந்திருக்க ( பக்தியோடு அன்புகூற ) வேண்டும்.*

*இன்னும் ஒரு சில பாடங்களில் தேவன் இஸ்ரவேல் ஜன்ங்களுக்கு வாக்குதத்தம் பண்ணியதை யாத்திராகமத்திற்கு பின்பு எப்படி நிறைவேற்றினார் என்பதை கற்றுக் கொள்ளப் போகிறோம்.*

## *2 தேவனுடைய கரம் நம்முடைய தேவைகளை வழங்குகிறது*

***உபாகமம் 11:1-4***

*தேவன் தம்முடைய பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் செய்த அற்புதமான செயல்கள் அனைத்தும் அவருடைய அன்பை இந்த உலகத்திலுள்ள மக்களுக்கு வெளிப்படுத்தி அவரிடம் மறுபடியும் திரும்ப உதவினார் என்பதையும் நினைவுகூற வேண்டும்.*

*செங்கடலை கடந்து வனாந்திரத்தை அடைந்து இஸ்ரவேல் ஜன்ங்களுக்கு நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி தெரி ந்து கொள்ளலாம். தேவன் இஸ்ரவேல் ஜன்ங்களுக்கு பரலோகத்தின் மன்னாவை தின்ந்தோறும் வழங்கினார் . ஆனாலும் அவர்கள் திருப்தி அடையாமல் முறுமுறுத்து கொண்டிருந்தார் கள்.*

*எண்ணாகமம் **11 : 4-6***

*தேவன் அவர் களுடைய நன்றியில்லாத இருதயத்தையும் முறுமுறுப்பையும் குறித்து கோபமடைந்தார் .*
*மோசேயும் அந்த மக்களுடைய மனப்பான்மை குறித்து பாரமாக எண்ணினார் .*

*எண்ணாகமம் **11 : 11 – 15***
*அதனால் தேவன் ஒரு ஆலோசனை கூறினார்*
*எண்ணாகமம் 11: 18 – 23*

*தேவன் அவர்கள் மேல் கோபமாக இருந்தாலும் இறைச்சியை தருவேன் என்று வாக்களித்தார் !*
*மோசேக்கு ஒரு சந்தேகம் எழுந்தது*
*(வ- 21 – 23)*
*அவர்க்ள் மொத்தம் 10 இலட்சம் பேர் இருந்தார்கள் ! இந்த உலகத்தில் 10 இலட்சம் பேருக்கு யாரால் இறைச்சி உணவளிக்க முடியும் என்று மோசே திகைத்து போனார் !*
*நான் ஒரு மாத காலம் இறைச்சியை அளிப்பேன் என்று தேவன் வாக்களித்திருந்தார். ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல ஒரு மாதம் இறைச்சியை தர விரும்பினார்.*
*மோசே இது கூடாத காரியம் என்று நினைத்து அதை தேவனிடமும் வெளிப்படையாக கூறினார்.*
*அதற்கு தேவன்'*
*உங்கள் வாழ்க்கையில் எந்த ஒரு தேவையை யாராலும் சந்திக்க முடியாது கூடாத காரியம் என்று நினைக்கிறீர்கள்?*
*நீங்கள் எதற்காவது ஜெபித்து இது நிறைவேறாது என்று கைவிட்டிருக்கிறீர்களா?*
*நாம் தேவனை உதாசினப்படுத்துவது தான் தேவனுக்கு விரோதமான காரியமாகும்.*
*உதாசினப்படுத்துவது என்பது, இது தேவனால் கூடாது என்று நம்புவதும் மற்றவர்களிடம் அதை வெளிப்படுத்துவதுமாகும். அது தேவனை பெலவீனர் என்று காண்பிக்கிறது!*
*நாம் தேவனை மகிமைப்படுவதற்காகதான் நம்மை படைத்திருக்கிறார், அவரை உதாசினப் படுத்துவதற்காக அல்ல*
*( ஏசாயா 43:5-7)*

***5** பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்; நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன்.*
*6 நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,*
*7 நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.*

*அதன் பிறகு தேவன் வாக்களித்த இறைச்சி என்ன ஆயிற்று?*

*எண்ணாகமம் 11:31-34*

> *அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டுவந்து பாளயத்திலும் பாளயத்தைச் சுற்றிலும் இந்தப்பக்கம் ஒரு நாள் பிரயாணமட்டும், அந்தப்பக்கம் ஒரு நாள் பிராயணமட்டும் தரையின்மேல் இரண்டு முழ உயரம் விழுந்துகிடக்கச் செய்தது. அப்பொழுது ஜனங்கள் எழும்பி அன்று பகல்முழுவதும் இராமுழுவதும் மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்து வைத்தார்கள்.தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார்.இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணினதினால் அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்.*

*தேவன் ஒரு சுழல்காற்றை அனுப்பி ( முழு இயற்க்கையும் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது ) காடையை சேர்த்து பாளையத்தை சுற்றி வந்தடைய செய்தார். காடைகள் 3 அடி ஆழத்திற்கு ஒரு நாள் பயண தூரம் குவிந்திருந்தது. உங்களால் அதை கற்பனை செய்ய முடிகிறதா!*

*( ஒரு முழம் என்பது கைமுட்டியிலுருந்து விரல்களின் நுனி வரை இருக்கும் 2 முழம் என்றால் 3 அடி வரை இருக்கும் ). ஒரு நாள் பயணம் என்பது 46 கிலோமீட்டர் தூரமாகும் அந்த இடம் முழுவதும் காடைகளால் குவிந்திருந்தது! ( ஒரு ஓமர் என்றால் 4 லிட்டர்கள் அதாவது ஒருவர் 40 லிட்டர் காடைகளை சேர்த்தார்கள் ).*

*தேவன் அனுப்பிய அந்த காடைகளின் எண்ணிக்கையை யாராலும் எண்ணிவிட முடியாது. அது 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சாப்பிடுவதற்கும் தாராளமாக இருந்தது!*

*தேவனுடைய கரம் எவ்வளவு வல்லமையானது! அவருடைய ஓங்கிய கையினால் ஒரு தேசத்திற்க்கே உணவளிக்க முடிந்தது!*

*ஆனால் அவர்கள் தேவன் இறைச்சியை தர முடியுமா ( அல்லது வேறு தேவைகளுக்காக ) என்று சந்தேகப்பட்டதால் அவர்களை வாதைகளால் வாதித்தார் அதனால் நிறைய மக்கள் இறந்து போனார்கள்.*

*பகிர்ந்து கொள்ளுதல்:*

*பல ஆண்டுகளுக்கு முன்பாக பெங்களூர் சபையின் மாலை ஆராதனை மற்றும் மற்ற கூட்டங்களுக்காக விஷ்ராந்தி நிலையம் என்ற அரங்கத்தை வாடகைக்கு எடுத்து வந்தது. அதில் ஒரு கூட்டத்திற்காக நானும் பீனாவும் பயிற்சி அளிப்பதற்காக சென்றிருந்தோம். எப்போதெல்லாம் கூட்டம் நடக்கிறதோ அப்போதெல்லாம் அந்த அரங்கத்தின் அதிகாரிகள் எதாவது பிரச்சனை செய்வார்கள். ஒரு சில வேளை நாங்கள் அனுமதி பெறவில்லை என்றும் அல்லது அந்த இடத்தில் உள்ள வேறு எதாவது அரங்கத்தில் மாற்றியோ தொடர்ந்து தொந்தரவு செய்வார்கள். ஒருமுறை சீஷர்கள் வெகு தொலைவில் இருந்து வருவதால் அவர்களுக்காக 'flask'ல் டீ எடுத்து சென்றோம். அதை பார்த்த அதிகாரிகள் "உணவு பொருட்கள் அனுமதியில்லை" என்று கூறிவிட்டார்கள்!*

*நாங்கள் எபெசியர் 3:20-21 நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.*

*என்ற வசனத்தை நினைவுகூர்ந்து ஜெபித்தோம். அதன் பின்பு ஒரு நாள் வியாபார கட்டிடங்கள் விற்பனை விளம்பரத்தை பார்த்தேன் அதில் சிவாஜி நகரின் அருகாமையில் விற்பனைக்கு உள்ளது என்று குறிப்பிடப் பட்டிருந்தது. அந்த கட்டிட உரிமையாளாரும் குறைந்த விலைக்கு கொடுக்க விரும்பினார். பொதுவாகவே கட்டிடத்தை விற்க விரும்புகிறவர்கள் எந்த மாற்றங்களையும் செய்யாமல் கொடுப்பார்கள், ஆனால் அவரோ புதுப்பித்து, தரையை சீர்படுத்தி , வெள்ளையடித்து உபயோகிக்க தயாரான நிலையில் மாற்றி அவரது பணத்தையே செலவழித்தார்! நாங்கள் வெறும் நாற்காலிகள் மற்றும் sound system மட்டும் வங்க வேண்டியிருந்தது!*

*சில நாட்களிலேயே அந்த கட்டிடத்தை வங்க முடிந்தது. அதில் மாலை நேர ஆராதனை மற்றும் நிகழ்ச்சிகள் சுமார் 100 பேர் அமரும்படி இருக்கிறது. வியாபார இடம் என்பதால் பாடல்களுக்கும் ஜெபிப்பதற்கு எந்த இடையூறும் கிடையாது. இனி யாருமே வெளியேற்ற முடியாது! டீ காப்பி செய்ய எந்த தடையுமில்லை! தேவன் நிச்சயமாகவே அவரது ஓங்கிய கரத்தால் நமது தேவைகளை வழன்ங்குகிறார்!*

*சவால்:*

1. *தேவன் உங்கள் வாழ்க்கையில் வழங்கிய அனைத்தையும் பட்டியலிட்டு எழுதி அதற்காக நன்றி செலுத்தி ஜெபியுங்கள். அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.*
2. *தேவன் உங்களுக்கு ( மற்றும் சபைக்கு ) வேறெந்த தேவைகளை சந்திக்க வேண்டும் என்று மற்றொரு பட்டியலை எழுதி அதற்காக ஜெபியுங்கள்.*

## 3 - தேவனுடைய கரம் ஓய்வுநாளுக்கான தேவைகளை சந்திக்கிறது

*தேவன் ஓய்வுநாளை பத்துக் கட்டளைகளில் ஒன்றாக நியமித்திருந்தார். வாரத்தில் ஒரு நாள் மக்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். இஸ்ரவேல் தேதசத்தார் கானான் தேசத்தை அடைந்தவுடன் ஏழாம் ஆண்டு அந்த நிலத்திற்கு ஓய்வு ஆண்டாக நியமித்தார்.*

*தேவன் நம்மை ஓய்வெடுக்கக் கூறினாலும் நாம் "என்னுடைய குடும்பத்திற்காக உழைத்து தேவைகளை சந்திக்க வேண்டும்" என்று கூறுகிறோம்!*

*தேவன் நம்மை ஓய்வெடுக்க கூறினால், நாம் ஓய்வெடுக்கும் போது அந்த நாளின் தேவைகளை அவருக்கு சந்திக்க தெரியும்.தேவனுக்கு கீழ்படிந்து ஓய்வெடுக்கும் போது உங்களுடைய தேவைகளை அவர் சந்திப்பார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா ?*

*யாத்திராகமம் 16 & லேவியராகமம் 25 படியுங்கள்*

*வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது ஆண்டுகள் இருந்த போது தினந்தோறும் வாரத்தில் ஆறு நாளும் அவர்களுக்கு மன்னாவை  கொடுத்தார். ஆறாம் நாளில் ஓய்வு நாளுக்கு தேவையானதையு சேர்த்து இரண்டு மடங்காக கொடுத்தார். அதை சமைத்து வைக்கவும் கட்டளையிட்டார் ஏனென்றால் ஏழாம் நாளில் எந்த வேலையும் இருக்கக்கூடாது என்று கட்டளையிட்டார். இந்த வாக்குத்தத்தை தேவன் 40 ஆண்டுகளாக தவறாமல் காப்பாற்றினார்.*

*அத்தனை வாக்குத்தங்களையும் கட்டளைகளையும் கொடுத்த பின்பும் இஸ்ரவேல் ஜனங்கள் என்ன செய்தார் என்று பாருங்கள் (யாத் 16:27) ஏழாம் நாளும் சென்று பார்த்து எதுவும் கிடைக்காமல் திரும்பினார்கள்.  வச 28ல் தேவன் மோசேயை பார்த்து "எவ்வளவு காலம் இந்த ஜனங்கள் என்னுடைய கட்டளைகளை மீறிநடப்பார்கள்" என்றார்.*

*நீங்கள் ஓய்வெடுக்கிறீர்களா? தேவன் நீங்கள் ஓய்வெடுக்க விரும்புகிறார் என்று அறிவீர்களா? அறிஞர்கள், நம்முடைய மூளை நாம் ஓய்வெடுக்கும்போது தான் சுத்தம் செய்து மறுபடியும் புதிதாக செயல்பட செய்கிறது என்கிறார்கள். **(read [http://www.eurekalert.org/pub_releases/2013-10/uorm-tsp100913.php](http://www.eurekalert.org/pub_releases/2013-10/uorm-tsp100913.php))***

*லேவியராகமம் 25ல் விளைநிலங்களுக்கு எப்படி ஓய்வு ஆண்டை அநுசரிக்க வேண்டும் என்று1 கூறியிருந்தார். ஆறு ஆண்டுகள் உபயோகித்தபின் ஏழாம் ஆண்டு எந்த அறுவடையில்லாமல் ஓய்வு தரும்படி கட்டளையிட்டார்.*

*ஒருவேளை நமக்கு ஒரு கேள்வி எழலாம் எப்படி அவர்கள் ஏழாம் ஆண்டு சாப்பிட்டார்கள் என்று.*

*லேவியராகமம் 25:20-22*

*தேவனுடைய திட்டங்கள் அற்புதமானதாக இருக்கிறதா?*

*அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள் இடைவிடாமல் தொடர்ந்து ஒரே பயிரை விளைய செய்தால் அந்த நிலம் சரியாக வளர்ச்சியை தராது என்று. நியூட்ரியண்ட்ஸ் மற்றும் பாக்டிரியாக்கள் மற்றப்பட்டு அதன் விளைச்சளின் சுழற்சியை மாற்றியமைக்க வேண்டும் என்கிறார்கள்.அந்த நிலத்தில் ஒரு வருடம் எந்த பயிரும் பயிரிடாமல் இருந்தால் சுழற்சி உண்டாகி புது சத்துக்கள் உண்டாகும் என்கிறார்கள். இந்த கண்டுபிடிப்புகள் வெறும் சில ஆண்டுகளுக்கு முன்னதாக தான் கண்டுபிடிக்கப் பட்டது! ஆனால் தேவன் இந்த கட்டளையை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கொடுத்து விட்டார்!*

*யாருக்கு அறுவடையைப் பற்றி சரியாக தெரியும்? தேவனே பயிரையும் நிலத்தையும் உண்டாக்கினார்! நாம் அவருக்கு செவிகொடுத்தால் நம்முடை நிலங்கள், பயிர்கள் மற்றும் வாழ்க்கை மிகவும் பாதுகாப்பாகவும் செழிப்பாகவும் மாறிவிடும்.*

*நீங்கள் தேவனை நம்பி அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறீர்களா? அல்லது அவருக்கு கீழ்படிய காரணம் தேடுகிறீர்களா? தேனை முழுமையாக நம்பி கீழ்ப்படியுங்கள் ஏனென்றால் அவர் மிகவும் ஞானமுள்ளவரும் நம்பகமானவருமாவார்! அவருடைய முடிவுகளும் காரணங்களும் கடைசியில் வெளியாகும்!*

*நீங்கள் எதாவது வசனத்தை காரணமில்லாமல் இருக்கிறது என்பதற்காக கீழ்ப்படியாமல் இருக்கிறீர்களா?*

*அதை அறிக்கை செய்து தேவனிடம் ஒப்புக்கொடுங்கள் ( எடுத்துக்காட்டு: காணிக்கைக் கொடுப்பது, ஒருவரை ஒருவர் உற்சாகப் படுத்துவது, சபைக் கூட்டங்களுக்கு செல்வது, வழிநடத்துதலை எடுத்துக் கொள்வது...)*

4 வாசஸ்தலத்தை உருவாக்கும் தேவனுடைய கரம்

*யாத்திராகமம் 35:4 - 36:7 வரை படிக்கவும்*

*இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் இருந்து கானான் தேசத்திற்கு போகும்போது தேவன் ஒரு வாசஸ்தலத்தை உண்டுபண்ணி அதில் தேவையான எல்லாவற்றையும் பலியிடுமாறும் கட்டளையிட்டார். மோசே எல்லா ஜனங்களையும் ஒன்றாகக் கூட்டி வாசஸ்தலத்தை கட்டுவதற்கு தேவையான பொருட்களை காணிக்கையாக கொண்டு வர சொன்னார். ஜனங்கள் அதை கேட்டவுடனே தேவைக்கும் அதிகமான பொருட்களை கொண்டு வந்தார்கள்.*

*இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள் என்பதை நினைவுகூறுங்கள், அடிமைகளிடத்தில் அந்த அளவிற்கு தங்கமும் விலையுயர்ந்த கற்களும் கிடையாது! ஆனாலும் அவர்களிடம் தேவன் மிகவும் விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டு கட்டுமாறு கட்டளையிட்டார். அது எப்படி சாத்தியமாகும்? தேவன் மிகவும் அற்புதமான திட்டம் போடுகிறவராக இருந்தார்! அவர்கள் எகிப்திலிருந்து வரும்போதே திட்டம் போட்டிருந்தார்.*

*என்ன நடந்தது என்று படியுங்கள்: யாத்திராகமம் 12:35,36*

*அவர்களுக்கு தேவையான பொருட்கள் தங்கம் மற்றும் விலையுயர்ந்த கற்கள் அனைத்துமே எகிப்திலிருந்து புறப்படும்போதே கொடுத்திருந்தார். எகிப்தியர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுப்பதற்கான காரணம் என்னவென்றால் தேவன் அவர்களை 10 வாதைகளால் வாதித்திருந்தார், அந்த பயத்தால் மறுபடியும் எகிப்தியர்கள் சாபங்களை பெற்றுவிடக் கூடாது என்பதற்காக இஸ்ரவேலரை சமாதானத்துடன் போகும்படி கொடுத்து அனுப்பினார்கள்.*

*இப்போது அந்த வாசஸ்தலத்திற்கு தேவையான பொருட்களை பாருங்கள், அதற்கு வெறும் வெள்ளி, தங்கம் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் மட்டும் கிடையாது அத்துடன் அகாயா மரங்களும் மற்ற பொருட்களும் தேவையாக இருந்தது!*

*வாசஸ்தலத்தை கட்டுவதற்கு முன்னதாகவே தேவன் அதற்கு தேவையான பொருட்களை எகிப்தியரின் இருதயத்தை நகர்த்தி அதன் தேவைக்கு அதிகமாகவே கொடுக்க உதவினார். அதை போல இஸ்ரவேலரின் இருதயத்தையும் நகர்த்தி வாசஸ்தலத்தை கட்டுவதற்கு அவரின் நோக்கத்திற்காக கொடுக்க செய்தார். மோசே அவர்களை போதும் இனிமேல் கொண்டுவர வேண்டாம் என்று சொல்கிற வரைக்கும் கொடுக்கச் செய்தார்.*

*யாத்திராகமம் 35:30-34*

*தேவன் பெசலெயேலுக்கும் அகோலியாபிற்கும் சகலவித வேலை செய்யவும் மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கக் கூடிய ஞானத்தையும் கொடுத்திருந்தார்.*

*ஹட்சன் டெய்லர் என்னும் சீன நாட்டின் மிஷினரி " தேவனுடைய வேலைகள் தேவனுக்கேற்றபடி தான் நடக்கும் அதற்கு*

*தேவையான எதையும் அவர் தவறாமல் தருவார்" என்று கூறினார்.*

*உங்களிடம் உள்ள அனைத்தும் தேவனால் உங்களுக்கு கிடைத்தது என்று விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறீர்களா?*

*உங்களுடைய காணிக்கையை 10% அதிகமாக மற்றும் உங்கள் திறமைகள் ஆகியவற்றை தேவனுக்காக தருகிறீர்களா?*

*எப்படி உங்களால் அதை தர முடியும்?*

*தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்காக எந்த அளவிற்கு பங்கு கொள்கிறீர்கள்?*

*கடைசியாக எந்த ஆத்துமாவின் இரட்சிப்பிற்காக பங்கு கொண்டீர்கள்?*

*நீங்கள் எந்த இடத்தில் தலைவராக இருந்து செயல்படுகிறீர்கள்? எது உங்களை அதிகமாக செய்வதற்கு தடுக்கிறது? (நீங்கள் தலைவராக இல்லையென்றால் தலைவராக மாறுங்கள் தலைவராக இருந்தால் இன்னும் அதிகமாக எந்த காரியத்தில் செயல் பட போகிறீர்கள்)*

*3 - தேவனுடைய கரம் உனக்காக போராடும்*

*யாத்திராகமம் 13:21*

*அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.*

*தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேச அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்து வரும் போது, தேவன் அவர்களுக்கு முன்பாக பகலிலே மேகஸ்தம்பமாகவும் இரவிலே அக்னிஸ்தம்பமாகவும் வழிநடத்திச் சென்றார். அதனால் அவர்கள் இரவில் வெளிச்சமாகவும் குளிரிலே அனலாகவும் பயணம் செய்தார்கள்.*

*கற்பனை செய்துபாருங்கள் அது எப்படிப்பட்ட அனுபவமாக இருந்திருக்கும் என்று!*

*சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களோடு இரவும் பகலும் உங்களை பாதுகாத்து உங்கள் வழிகளை தாயார் செய்து வருகிறார்!*

*தேவன் அவர்களோடு மேகஸ்தம்பமாக இருந்து வனாந்திரத்தில் பகலின் கடுமையான வெயிலில் இருந்து பாதுகாத்து வந்தார். இரவிலே அக்னிஸ்தம்பமாக இருந்து வெளிச்சத்தையும் அனலையும் தந்து வழிநடத்தினார்.*

*தேவன் அவருடைய ஜனங்கள் மேல் அக்கரை கொண்டதை வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. அவர்களுடைய எல்லா தேவைகளையும் தனிப்பட்ட முறையில் சந்தித்தார் அவருடைய தூதர்களைக் கொண்டோ அல்லது வேறு யாரையோ கொண்டு சந்திக்கவில்லை தனிப்பட்ட முறையில் தகப்பனை போல சந்தித்தார்.*

*உபாகமம் 1:26-36*

*தேவன் அவர்களோடு இரவும் பகலும் இருந்து ஒரு தகப்பனைப்போல வழிநடத்திய பின்பும், தேவன் அவர்களை வாக்குத்தத்தம் செய்த இடத்திற்கு போக கட்டளையிட்ட போது, அந்த தேசத்தை சோதித்து வந்த மனிதர்களின் கெட்ட செய்தியான கானானியர்கள் இராட்சதர்கள் என்று கேட்டவுடன் அந்த தேசத்திற்கு போக மறுத்தனர். இதை தேவன் கேட்டவுடன் அவரை பாராட்டாததையும் அவர்களுடைய நன்றியில்லாத இருதயத்தையும் குறித்து மிகவும் கோபமும் வேதனையும் அடைந்தார். அவர்களால் தேவனுடைய வாக்குதத்ததைவிட அந்த தேசத்திலிலுள்ள மனிதர்களால் நம்பாமற் போனார்கள்.*

*காலேபும் யோசுவாவும் மட்டும் விசுவசித்து நம்பினார்கள்.*

*அவர்களுடைய கீழ்படியாமையையும் அவிசுவசத்தையும் குறித்து தேவன் இந்த வார்த்தைகளை பேசினார்.*

*உபாகமம் 1:29-30*

> *அப்பொழுது நான் உங்களை நோக்கி: நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள்.உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.*

*அந்த ஜனங்கள் அத்தேசத்திற்கு சென்று அந்த இராட்சதர்களால் மடிந்து போகவும் அவர்கள் தோறக்கடிக்க படவும் அவர்களை அனுப்பவில்லை. அதற்கு பதிலாக அவரே அவர்களுக்காக யுத்தம் பண்ண தீர்மானித்திருந்தார்.*

*இப்போது இது புதிதான காரியம் கிடையாது எற்கனவே மோசேயைக் கொண்டு எகிப்திலிருந்து புறப்படப்பண்ணியதை நினைவுகூறச் செய்தார். அவர் எப்போதுமே எகிப்திலும் அந்த வனாந்திர பயணத்திலும் அவர்களுக்கு முன்பாக வழிநடத்தினார்.*

ஒரு சில வசனங்களை படிக்கலாம்

*உபாகமம் 20:1-4; ஏசாயா 45:2, 52:12, 58:8.*

தேவனுடைய கரத்தின் வல்லமை எப்படிப்பட்டது? அவர் உங்களுக்கு முன்பாக போகும் போது நீங்கள் எதற்காகவும் பயப்படவும் அச்சம் கொள்ளவும் வேண்டும்?

தேவன் உங்களுக்கு முன்பாக சிறந்த தாயைப் போலவும் தந்தையைப் போலவும் செல்லும் போது எந்த ஆபத்தும் நம்மை சேதப்படுத்தாது.

அவர் ஒரு சிறந்த தலைவராக இருந்து நமக்கு முன்பாக சென்று நமக்கு சரியான வழியை ஆராய்ந்து நம்மை பொறுமையாகவும் பாதுகாப்பாகவும் நம்மை நடத்தி செல்கிறார்.

அவர் ஒரு வல்லமையான போர் தலைவராக இருந்து நமக்கு முன்பாக சென்று நமக்காக போராடுகிறார்.

உங்களால் அவரை பார்க்க முடிகிறதா? அவருடைய சமுகத்தை உங்களால் கவனிக்க முடிகிறதா?

இத்தனை ஆண்டுகளாக அவர் எப்படி உங்களுக்காக போராடி வருகிறார் என்பதை எழுதுங்கள்.

இந்த பிரச்சனைகளெல்லாம் உங்களுடையதல்ல என்றும் நீங்கள் அவரை சார்ந்திருப்பதால் அவருடையது என்றும் நம்ப தொடங்குங்கள்! நீங்கள் அவைகளுக்காக கவலை படுவதற்கு பதிலாக அவரது பலத்த கரமும் ஓங்கிய புயமும் உங்களுக்காக முன்சென்று போராடுகிறது என்பதை விசுவாசியுங்கள்!

தேவன் உங்களுக்காக போராடும்போது உங்களால் தூண்டுதல்களை மேற்க்கொள்ள கூடாதா?

உங்களால் மேற்க்கொள்ள சவாலாக இருக்கும் போராட்டம் மற்றும் தூண்டுகளை எழுதி அதை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து அதற்கு எதிர்த்து நின்று தேவன் தரும் விடுதலையை பாருங்கள்!

## *6 - நியாயத்தீர்ப்பிற்கான தேவனுடைய வல்லமையான கரம்*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பு மிகவும் எளிமையானது – ஆசிர்வாதம் அல்லது சாபம்*

*உபாகமம் 2:7*

*உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்தப் பெரிய வனாந்தரவழியாய் நீ நடந்துவருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை என்று சொல் என்றார்.*

*உபாகமம் 2 : 14-23*

*எரேமியா 17:5-7 இந்த வசனங்கள் தேவன் எப்படி நியாயந்தீர்ப்பார் என்று தெளிவாக கூறுகிறது.*

*நம்முடைய நம்பிக்கை எதை சார்ந்திருக்கிறது என்பதை பொறுத்து தான் நம்முடைய நீயாயத்தீர்ப்பு தேவனிடத்திலிருந்து வரும்.*

*இஸ்ரவேல் மக்களுக்கும் இப்படி தான் நடந்தது – தேவனுடைய பலத்த கரமும் ஓங்கிய புயமும் அவர்களை மகத்துவமான அற்புதங்களால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்ட போதும் " தேவன் தான் வாக்குத்தத்தம் பண்ணிய தேசத்திலுள்ள இராட்சதர்களை துரத்தி காப்பாற்றக் கூடும் " என்பதை அவர்களால் நம்ப முடியாமல் போனது.*

*அவர்கள் தேவனை நம்பாத காரணத்தால், தேவனுடைய சாபம் அவர்கள் மேல் விழுந்தது மற்றும் அவர்கள் வனாந்திரத்தில் அழியவும் 40 ஆண்டுகள் சுற்றித் திரியவும் தேவன் அவர்களை அனுமதித்தார்.*

*உபாகமம் 2:14-15*

*தேவனை சந்தேகப் பட்ட அந்த சந்தியை அழித்த பின்பு அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை அடுத்த சந்ததிக்கு நிறைவேற்றினார்.*

*உபாகமம் 7:16-26*

*இந்த வசனங்களில் தேவன் குளவிகளை அனுப்பி கானான் தேசத்திலுள்ளவர்களை துரத்துவார் என்று சொல்லுகிறார்!*

*மற்றும் யாத்திராகமம் 23:28 ல்*

> *உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன்.*

*யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்த பின்பும்*
*யோசுவா 24:11,12 ல்*

> *பின்பு யோர்தானைக் கடந்து எரிகோவுக்கு வந்தீர்கள்; எரிகோவின் குடிகளும், எமோரியரும், பெரிசியரும், கானானியரும், ஏத்தியரும், கிர்காசியரும், ஏவியரும், எபூசியரும், உங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள்; ஆனாலும் அவர்களை நான் உங்கள் கையிலே ஒப்புக்கொடுத்தேன்.எமோரியரின் இரண்டு ராஜாக்களையும் உங்கள் பட்டயத்தாலும் உங்கள் வில்லாலும் நீங்கள் துரத்தவில்லை; நான் உங்களுக்கு முன்பாகக் குளவிகளை அனுப்பினேன்; அவைகள் அவர்களை உங்கள் முன்னின்று துரத்திவிட்டது.*

*தேவன் குளவிகளை அனுப்புவேன் என்று சொன்னது ஒருவேளை குளவிகளை அனுப்பிஇருக்கலாம் அல்லது ஒரு தேவ தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்பியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.*

*யாத்திராகமம் 23:20,23,27*

> *20 வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.*
>
> *23 என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும், ஏத்தியரும், பெரிசியரும், கானானியரும், ஏவியரும், எபூசியரும், இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன்.*
>
> *27 எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன்.*

*இறுதியாக இந்த வசனங்களை படித்து முடித்துக் கொள்ளலாம்*

*உபாகமம் 2:20 – 23*

> *அதுவும் இராட்சதருடைய தேசமாக எண்ணப்பட்டது; முற்காலத்தில் இராட்சதர் அதிலே குடியிருந்தார்கள், அம்மோனியர் அவர்களைச் சம்சூமியர் என்று சொல்லுகிறார்கள்.*
> *அவர்கள் திரளானவர்களும் ஏனாக்கியரைப்போல நெடியவர்களுமான பலத்த ஜனங்களாயிருந்தார்கள்; கர்த்தரோ சேயீரில் குடியிருந்த ஏசாவின் புத்திரருக்கு முன்பாக ஓரியரை அழிக்க, அவர்கள் அந்த ஜனங்களைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த ஸ்தானத்தில் இந்நாள்வரைக்கும் குடியிருக்கிறதுபோலவும், கப்தோரிலிருந்து புறப்பட்ட கப்தோரியர் ஆசேரீம் தொடங்கி ஆசாமட்டும் குடியிருந்த ஆவியரை அழித்து, அவர்கள் இருந்த ஸ்தானத்திலே குடியேறினது போலவும், கர்த்தர் அவர்களை இவர்களுக்கு முன்பாக அழியப்பண்ண, இவர்கள் அவர்களைத் துரத்திவிட்டு, அவர்கள் இருந்த ஸ்தானத்திலே குடியேறினார்கள்.*

*தேவனுடைய கரம் எப்படி அந்த தேசங்களை நியாயந்தீர்த்தது என்பதை பாருங்கள்!*

*சம்சூமியர்களும் ஏனாக்கியரை போல இராட்சதர்களாக இருந்தார்கள் ஆனால் தேவன் அவர்களை அம்மோனியர்களைக் கொண்டு சங்கரித்து அவர்களிடம் ஒப்புக் கொடுத்தார்.*

*ஏதோமியரை ( ஏசாவின் சந்ததியார் ) கொண்டு ஓரியர்களை சங்கரித்து அவர்களுடை தேசத்தை ஏதோமியரிடம் ஒப்புக் கொடுத்தார்.*

*ஏவியரை கப்தோரியரைக் கொண்டு சங்கரித்து அவர்களிடம் ஒப்புக் கொடுத்தார்.*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கரத்திலிருந்து யாராலும் தப்ப முடியாது.*

*எபிரேயர் 10:26-31 வசங்களை தியானித்து நீங்கள் எதாவது பாவங்களை மனப்பூர்வமாய் செய்து கொண்டிருந்தால் வசனம் 31ன் படி "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" என்பதை நினைவுகூர்ந்து மனந்திரும்புங்கள்.*

## 7 - பொறுத்திருந்து தேவனுடைய கரம் கிரியை செய்வதை பாருங்கள்

***யாத்திராகமம் 14***

தேவன் தமது நோக்கத்தின்படியே இஸ்ரவேல் ஜனங்களை பார்வோன் சேனைக்கும் செங்கடலுக்கும் நடுவாக அனுமதித்திருந்தார். அவர் மிகவும் தெளிவாக திட்டமிட்டு மோசேக்கு அதை வெளிப்படுத்தியிருந்தார். (வச 1-4)

ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் சேனங்களையும் செங்கடலையும் பார்த்த போது தாங்கள் சிக்கிக்கொண்டார்கள் என்பதை தெரிந்ததும் அவர்களுடைய உண்மையான நிறம் வெளிப்பட்டது. அவர்கள் தேவனுக்கும் மோசேவுக்கும் விரோதமாக முறுமுறுக்கவும் குறை கூறவும் தொடங்கி விட்டார்கள்.

வச 11-14

நாம் முன்பு கற்றுக் கொண்டது போல தேவன் எப்போதுமே தன்னை முழுமையாக நம்ப வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் ஆனால் அவரை எப்போதுமே சந்தேகப்படுவது தான் நம்முடைய தூண்டுதல்களாக இருக்கிறது.

நாம் தேவனுடைய திட்டங்களை சந்தேகப்படும் போதும் கேள்வி கேட்கும் போதும், நம்முடைய தற்காலிக சூழ்நிலையை மட்டும் தான் பார்க்கிறோம் தேவனுடைய வல்லமையான கரம் நம்மை நடத்துவதையும் அவருடைய திட்ட்த்தின் படி வழிநடத்துவதையும் மற்றும் முடிவில் அவர் தான் உண்மையான வெற்றியாளர் என்பதையும் நாம் பார்ப்பதில்லை.

இந்த சந்தேகப்படும் இஸ்ரவேலர்கள் தாங்கள் கடந்து வந்த பாதையை திரும்பி பார்த்து தேவனுடைய கரம் அவர்களை விடுவிப்பதை காட்டிலும் எகிப்தில் வேலை செய்வதையே அதிகமாக விரும்பினார்கள்.

நீங்கள் எப்போதாவது கிறிஸ்தவராக மாறுவதற்கு முன்னிருந்த வாழ்க்கை நன்றாக இருந்தது என்று நினைத்திருக்கிறீர்களா? நமக்கு நிறைய சுகந்திரம் இருந்த்து – பாவம் செய்வதற்கு ( உங்களுக்கு பிட்த்தமானதை செய்யும் போது மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கும் ) ஆம் அது தான் உங்களுடை கிறிஸ்தவ வாழ்க்கையின் சவால்களாக இருக்கிறது! ஆனால் தேவன் உங்களுக்காக வாக்குத்தத்தம் பண்ணியதிலிருந்து உங்கள் கவனத்தை தவறவிடாதிருங்கள். தேவன் நம்பகமானவர்! அவரது ஓங்கிய கரத்தை நீட்டி நம்மை காப்பாற்றுவார்! அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்ற உண்மையுள்ளவர்!

மோசேயுடைய மனப்பான்மையும் இஸ்ரவேல் ஜங்களுடைய குறைகூறுதலும் எப்படி வேறுப்பட்டிருக்கிறது என்பதை பாருங்கள். மோசே தேவனுடைய திட்டங்களையும் அவரால் எவ்வளவு பெரிய சவாலான சூழ்நிலையிலும் நம்மை காப்பாற்ற முடியும் என்பதையும் அவர் எந்த நேரத்திலும் பயப்பட மாட்டார் என்றும் அவரால் அநேக ஜனங்கள் நடுங்குவார்கள் என்றும் முழுமையாக நம்பியிருந்தார்.

நம்முடைய வாழ்க்கையில் எப்போதெல்லாம் " என்னால் என்ன செய்ய முடியும்?" என்ற கேள்வி எழும்போதெல்லாம் அதற்கான விடையை இங்கே எப்படி பெற்றுக்கொள்வீர்கள்?

மோசே அதற்கான விடையை இங்கே அளிக்கிறார்

"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்"

நாம் மற்ற மொழிபெயர்ப்புகளில் பார்க்கும் போது

தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மாயிருங்கள்.

தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் அமைதியாக இருங்கள்

தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் நிதானமாக இருங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சும்மாயிருங்கள் என்றால் எதுவும் செய்யாமல் இருங்கள் என்று அர்த்தம் கிடையாது. நம்முடைய நாவை நாம் அமைதியாக பொறுமையாக வைத்திருக்க வேண்டும் என்று அர்த்தமாகும்.

அவர்கள் அவர்களுடைய நாவை வைத்து என்ன செய்தார்கள்?

குறைகூறுவது, முறுமுறுப்பது, அவர்களுடைய சந்தேகங்களை தொடர்ந்து வெளிப்படுத்துவது மற்றும் தேவனை குறித்தும் மோசேயை குறித்தும் திருப்தியடையாத வார்த்தைகளை கூறுவதுமாக இருந்தார்கள்.

இயேசு, "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று கூறியிருக்கிறார்.

*ஏசாயா 43:6,7*

> *நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன். (லூக்கா 6:45)*

*அவர்களுடைய வாயின் வார்த்தைகள் அவர்கள் தேவனை நம்பவில்லை என்று வெளிப்படுத்துகிறது!.*
*அதனால் மோசேயும் தேவனும் அவர்களிட்த்தில் என்ன எதிர்ப்பார்த்தார்கள். அமைதியாக இருக்க சொன்னார்கள் ( தேவன் மேல் விசுவாசம் வைத்து அவரது ஓங்கிய கரம் நம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடன்) தேவனுடைய விடுதலைக்காக காத்திருக்கவும் அதை பார்க்கவும் சொன்னார்கள்.*

*அதன் பின்பு என்ன நடந்தது?*
*மிகவும் அற்புதமான மற்றும் திகைப்பளிக்க கூடிய நிகழ்ச்சி நடந்தது. அது தேவன் செய்த மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றாக கருதப்பட்டது.*

*யாத்திராகமம் 14:15,16*
*தேவன் மோசேவும் நிம்மதியாக இருந்து ஜனங்களை வழிநடத்தும்படி எதிர் பார்த்தார். உங்களால் நடக்க போவது என்னவென்று தெரியவில்லை என்றாலும் முன்னேறி செல்லுங்கள்! அது தான் விசுவாசத்தில் படி நடப்பதாகும்! நாம் அப்படிப்பட்ட விசுவாசத்தில் நடக்கும் போது நம்மால் பார்க்க முடியாத பாதைகளை தேவன் திறப்பார்! அது மிகவும் அற்புதமான ஒன்றாக இருக்கும்!*

*வசங்கள் 20-22*
*அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுவதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.*
*மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.*

*முதலாவது அவர்களுக்கு முன்பாக தூதனை அனுப்பி எகிப்திலிருந்து அவர்களுடைய கைகளிலிருந்து காப்பாற்றினார். இரவு முழுவதும் ஒரு பக்கம் இருளாகவும் மறுபக்கம் வெளிச்சமாகவும் இருந்து அவர்களை வழிநடத்தினார். பின்பு பெருங்காற்றை அனுப்பி செங்கடலை பிளந்தார் மற்றும் அந்த பலத்த காற்றினால் அந்த கடலின் தரை ஈரமாக இருந்த போதும் அது வெட்டாந்தரையை போல மாறியது. அந்த ஜனங்கள் அதின் மேல் நடந்து போனார்கள்.*

*இந்த வசனங்களில் இருந்து என்ன கற்று கொள்கிறீர்கள்?*

*சாவல்களை சந்திக்கும் போது எப்படி எதிர்கொள்கிறீர்கள்?*

*நீங்கள் இதுவரை சந்தித்த மிகப்பெரிய சவால் என்னது? அதிலிருந்து தேவன் எப்படி விடுவித்தார் என்பதை எழுதுங்கள்.*

*தேவன் மற்றவர்களுடைய வாழ்க்கையில் ஏற்ப்பட்ட மோசமான சூழ்நிலைகளிருந்து விடுவிக்கும் போது தேவனை எப்படி பார்க்கிறீர்கள் என்பதை எழுதுங்கள்?*

*நீங்கள் சவால்களை சந்திக்கும் போது எப்படி உங்கள் நாவை கொண்டு என்ன செய்வீர்கள்?*

*இதிலிருந்து என்ன செய்ய வேண்டுமென்று கற்று கொண்டீர்கள்?*

## *8 - தேவனுடைய கரம் உங்களுக்கு சிறந்ததை வழங்கும்*

***உபாகமம் 11:10-21***

*இஸ்ரவேலர்கள் எப்படி நம்பிக்கையில்லாமல் செங்கடலின் அருகே குறைகூறிக் கொண்டிருந்ததையும் தாங்கள் எகிப்திலிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று சொன்னதையும் நினைத்துப் பாருங்கள்?*

*ஒருவேளை அவர்கள் எகிப்து தேசத்தைத் தவிர வேறு தேசத்தை காணாதது தான் இதற்கு காரணமாக இருந்திருக்கும். ஆனால் தேவன் நீங்கள் கற்பனை செய்வதற்கும் மேலான தேசத்தை உங்களுக்காக என்னுடைய பலத்த கரத்தைக் கொண்டு தருவேன் என்று சொல்லுகிறார்.*

*தேவன் அந்த இரு தேசங்களையும் ஒப்பிட்டு பார்க்கிறார். ( உபாகமம் 11:10-14)*

*தேவனுடைய ஒரே எதிர்ப்பார்ப்பு என்னவென்றால் கர்த்தராகிய தேவனை அவர்கள் அன்பு செய்வதும் அவருடைய கட்டளைகளுக்கு உண்மையாக கீழ்படிவதும் தான். பின்பு அவர் உங்களுடைய தேசத்தில் அந்தந்த காலத்தில் மழை பெய்யவும், நீங்கள் புது தானியம், திராட்சரசம் மற்றும் எண்ணையும் அனுப்புவார்.*

*அது தான் வாக்குத்தத்தம்! அவர்கள் தேவனை அன்பு செய்த காலம் வரை அவர் அவர்களுக்கு நிறைவேற்றினார்.*

*நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு செவிசாய்க்கிறீர்களா?*

*அவருடைய பலத்த கரத்தைக் கொண்டு அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்கிறீர்களா? அல்லது சந்தேகப்படுகிறீர்களா?*

*நாம் நம்பிக்கையோடு இருக்கும் போது தைரியமாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியும். தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில்லாத போது நாம் பயத்தோடும் கவலையாகவும் இருப்போம்.*

*இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றினார் என்பதற்கு சாட்சியாக இருந்த போதும், தேவன் கொடுத்த அற்புதமான தேசத்தில் வழ்ந்த போதும், அறுவடையை அனுபவித்த போதும் வெகு சீக்கிரத்தில் தேவனை புறக்கணித்தார்கள்.*

*பின்பு தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணியபடி அவர்கள் தேவனை நம்பாத காரணத்தால் அவர் வானத்தின் கதவுகளை அடைத்தார் அந்த தேசம் வெறுமையாக மாறியது ஜனங்கள் பஞ்சத்தால் பாதிக்கப் பட்டனர். ( 1 இராஜா 18 ம் அதிகாரம் இப்படிப்பட்ட சூழ்நிலையை விளக்குகிறது).*

*தேவன் இன்று நமக்கு ஒரு சிறிய பகுதியை தருவேன் என்று சொல்லவில்லை அதற்கும் மேலாக பரலோகத்தை நமக்கு வாக்களித்திருக்கிறார்! தேவன் நமக்கு வாக்களித்ததை நிறைவேற்றுவார் என்று விசுவசிக்கிறீர்களா? உங்களுடைய கண்கள் பரலோகத்தின் மேல் நோக்கமாக இருக்கிறதா?*

*நாம் இந்த பூமியில் இருக்கும் போதும் நாம் தேவனை அன்பு செய்து அவரை நம்பும் போது நம்முடைய தேவைகளை அவர் சந்திக்கிறார்!*

*தேவன் அவரது ஜனங்களிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால் மற்ற தேவர்களால் கவரப்படாமலும் அவைகளை ஆராதிக்கக் கூடாது என்பது தான்!*

*நாம் இன்று யாரை ஆராதிக்கிறோம்? பரலோகத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவனையா அல்லது இந்த உலகத்தில் இருக்கின்ற சந்தோஷங்களையா?*

*நாம் தேவனைவிட பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால், நாம் சபையில் இருக்கிறோம் என்று சொன்னாலும் விக்கிரகராதனை செய்கிறவர்களாக இருக்கிறோம்*

*யாக்கோபு 4:4*

> *விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.*

*தேவன் எதனால் தங்களை கிறிஸ்த்தவர்கள் என்று சொல்லுபவர்களை விபசாரர் என்று கூறுகிறார்? இயேசுவே நமது மணவாளனாக இருக்கிறார் நாம் அவரது மணவாட்டியாக இருக்கிறோம்! அவர் தம்முடைய அன்பில் உண்மையாகவும்*

*அர்பணிப்புடனும் இருக்கிறார்! நாம் வேறு யாருடனாவது தொடர்பு வைத்திருந்தால் அது விபச்சாரமாக இருக்கிறது! நாம் இந்த உலகத்தோடு சிநேகம் வைத்திருந்தால் நாம் தேவனுக்கு முன்பாக உண்மையில்லாமலும் விபச்சாராகவும் இருக்கிறோம்!*

*பிசாசு தான் இந்த உலகத்திற்கு தலைவனாக இருக்கிறான் என்று இயேசு சொல்கிறார். நீங்கள் இந்த உலகத்தால் கவரப்பட்டிருக்கிறீர்களா?*

*(யோவான் 12:31; 14:30; 16:11)*

*II கொரிந்தியர் 4:4*
*தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

*பழைய ஏற்ப்பாட்டில் விக்கிரகராணை எப்போதுமே விபச்சாரத்திற்கு இணையாக கருதப்பட்டது அது புதிய ஏற்ப்பாட்டிலும் அப்படியே தொடருகிறது.  இந்த உலகத்தைப் பார்த்து கவரப்படுவது, ஆசைப்படுவது மற்றும் இந்த உலகத்துடன் நட்பை உண்டாக்குவது இவை அனைத்தும் தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கிறது.*

## *9 தேவனுடைய கரம் அவரை நம்பாதவர்களுக்கு பயத்தை கொண்டு வரும்*

*உபாகமம் 11:25; 28:6-10*

*இஸ்ரவேல் ஜனங்களைக் கண்டு மற்ற ஜனங்கள் பயப்படுவார்கள் என்று தேவன் சொன்ன பின்பும், அவர்கள் கர்த்தரை கண்டு பயந்ததால் அவர்களுக்கு அப்படி சொன்னார். இந்த வாக்குத்தத்தங்களை இஸ்ரவேல் ஜனங்கள் எதிரிகளை காண்பதற்கு முன்பு அவர்கள் வனாந்திரத்தில் இருக்கும் போதே தேவன் வாக்களித்திருந்தார்.*

*ஒரு சமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக உலவு பார்க்க சென்றவர்களிடம் ராகாப் எரிகோ பட்டணத்தார் எப்படி தேவன் அவர்களுக்கு கிரியைகளை செய்ததினிமித்தம் அவர்களை கண்டு பயந்தார்கள் பயந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார! (யோசுவா 2:8-11)*

*வேறொரு சமயத்தில் தேவன் எப்படி அவர்களை யோர்தான் நதியை கடப்பதற்கு உதவி செய்தார் என்று சொல்லியிருக்கிறது. ( யோசுவா 4:23-24)*

*தேவன் அவர்களை யோர்தான் நதியை கடப்பதற்கு உதவி செய்ததின் நோக்கம் என்னவென்றால் இந்த பூமியிலுள்ள ஜனங்கள் யாவரும் "தேவனுடைய கரம் பலத்தது என்று அறிந்து அவருக்கு பயந்திருக்க வேண்டும்" (வச 23)*

*நாம் தேவனுக்கு பயப்படும் போது மனிதர்களுக்கு பயப்படும் பயம் விலகிவிடும் என்பதை நினைவுகூற வேண்டும்!*

*மற்றொரு சமயம் கிதியோனின் நேரத்தில் ஒரு மிகப் பெரிய படையோடு மோதுவதற்காக கிதியோன் என்னும் சதாரண மனிதன் அந்த நேரத்தில் மிகவும் பெலவீனமாக இருந்த இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தி சென்றார். தேவனும் மிகப்பெரிய படையை கொண்டு செல்லாத படி வெறும் 300 வீரர்களை மட்டுமே அழைத்து செல்லும்படி கட்டளையிட்டார்! அந்த நேரத்தில் கிதியோனுடைய மனநிலை எந்த அளவிற்கு பயந்ததாக இருந்திருக்கும்! கடைசியில் அந்த பாளயத்திற்கு சென்றதும் அந்த நாட்டு வீரர்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவதை கிதியோன் கேட்டபோது தேவன் மேல் மிகுந்த நம்பிக்கையோடு தேவன் ஏற்கனவே தம்முடைய கிரியை செய்து அந்த தேசத்து வீரர்களை பயம் கொள்ள தொடங்கி விட்டார் என்று புரிந்து கொண்டார்!*

*ரோமர் 8:31-39*

*பவுல் இந்த இடத்தில் – " தேவன் நம் பட்சத்தில் இருக்கும் போது நமக்கு விரோதமாக நிற்பவன் யார்? " என்று கேட்கிறார்.*

*இன்று இஸ்ரவேல் ஜனங்களைப் போல் நாம் யாரும் போர்க்களத்தில் சென்று சண்டைபோடுவது கிடையாது! ஆனால் ஆவிக்குரிய போராட்டம் நம் வாழ்நாள் முழுவதும் இருக்கிறது. சாத்தான் எப்போதுமே சோதனைகளால் நம்மை விழச்செய்து நம்முடைய ஆத்துமாவை பெற்றுக்கொள்ள முயற்சி செய்வான்! ஆனால் இயேசு கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவிற்காக போராடி வெற்றி பெற்றுவிட்டார்! நாம் இந்த உலகத்திலுள்ள போராளிகளைவிட இயேசுவின் அன்பால் பெரியவர்களாக இருக்கிறோம்!*

*இஸ்ரவேல் ஜனங்களை எதிர்து வந்த எல்லா தேசங்களுமே அவர்களோடு தேவன் இருப்பதைப் பார்த்து பயந்தார்கள்! அதே தேவன் இன்று நம்மோடிருப்பதைக் கண்டு சாத்தான் எந்த அளவிற்கு பயப்படுவான்?*

*சமீபமாக எந்தெந்த சோதனைகளை நீங்கள் சந்தித்து வருகிறீர்கள்? உங்களுடைய மனப்பான்மை எப்படியிருக்கிறது? பயத்தோடு பணிந்து போகிறீர்களா அல்லது தைரியமாக மேற்க்கொள்கிறீர்களா?*

*யாக்கோபு 4:7*

*தொடர்ந்து வரும் சோதனைகளை எதிர்த்து நின்று தேவனுடைய கரத்தை அனுபவியுங்கள் மற்றும் உங்கள் பெலவீனங்களை பலமாக மாற்றுங்கள்!*

*10 தேவனுடைய கரத்தால் வரும் நன்மைகளுக்காக நன்றியுணர்வோடு இருத்தல்*

*உபாகமம் 26:1-15*

*இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்வதற்கு முன்பாக தேவன் மற்றுமொரு கட்டளையை அவர்களுக்கு கொடித்தார். தேவன் அவர்களுக்கு பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை கொடுத்தற்காக அவர்கள் எப்படி நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை சொல்லியிருந்தார்.*

*அவர்கள் தங்களுடைய முதற்பலனை பலிபீடத்தண்டையில் கொண்டு வந்து எப்படி நன்றி சொல்ல வேண்டும் என்று சொல்லியிருந்தார்: (வச 3-11)*

*அவர்கள் எப்படி மூன்று பங்காக தங்கள் நன்றியுணர்வோடு இருந்தார்கள் என்பதை பார்க்கலாம்;*

*1. தங்களுடைய பழைய வாழ்க்கையையும் தாங்கள் பாடுகளையும் (அடிமைத்தனத்தையும்) நினைவுகூறுதல்.*

*2. தேவன் அவர்களை எப்படி தம்முடைய ஓங்கிய கரத்தாலும் பலத்த கையாலும் அற்புதங்கலள் மற்றும் அதிசயங்கள் செய்து எகிப்திலிருந்து கொண்டுவந்தார் என்பதை (அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததை )நினைவுகூறுதல்.*

*3. தேவன் அவர்களுக்கு பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை கொடுத்தார் என்பதை நினைவுகூறுதல். (மகிமையான நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்)*

*அவர்கள் தங்களுடைய முதற்பலனை பலிபீடத்தண்டையில் கொண்டு வந்து எப்படி நன்றி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார்.*

*இதை தான் தேவன் இன்றும் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார் அல்லவா?*

*உங்களுடைய கடந்த கால வாழ்க்கையில் இருந்த அடிமைத்தனமான பாவங்களிலிருந்து நீங்கள் எப்படி வந்தீர்கள்? நம்பிக்கையில்லாமல் இருந்த சூழ்நிலைகளில்! உங்களால் மாறவே முடியாது என்ற சூழ்நிலைகளில்! தேவன் தமது ஓங்கிய புயத்தினாலும் பலத்த கரத்தினாலும் தம்முடைய குமாரனை கொண்டு நம்மை இரட்சித்தார் என்பதையும்! உங்களை எப்படி அவருடைய குடும்பத்தில் தம்முடைய பிள்ளையாக சேர்த்தார் என்பதையும் நினைவுகூறுங்கள்!*

*இப்போது அவருடைய இராஜ்ஜியத்தில் உங்களுக்கு மகிமையான வாழ்க்கையை தந்ததையும் இந்த பூமியில் வாழும் வாழ்க்கைக்கு பிறகு அவர் நமக்கு வாக்குத்தத்தம் செய்த உண்மையான தேசமான பரலோகத்திற்கு அழைத்து செல்வார்!*

*இவை எல்லாவற்றுக்கும் நீங்கள் நன்றியுணர்வோடு இருக்கீறீர்களா? உங்களுடைய நன்றியுணர்வை தேவனுக்கு காண்பிக்கிறீர்களா? உங்களுடைய முதற்பலன்கள் மற்றும் தசமபாக காணிக்கைகளை தேவனுக்கு செலுத்துகிறீர்களா? அல்லது சுயநலமாக உங்களுக்காக எல்லாவற்றையும் வைத்துக்கொள்கிறீர்களா?*

*உங்கள் வார்த்தைகளால் தேவனுக்கு கடந்தகாலம் நிகழ்காலம் மற்றும் வாக்குத்தத்தம் பண்ணிய எதிர்காலத்திற்காக நன்றி செலுத்துகிறீர்களா?*

*தேவனுடைய கரத்தால் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்த கற்றுக்கொள்ளுங்கள்.*

*நாம் நன்றியில்லாமல் நடந்து கொள்ளும் போது என்ன நேரிடும்? நாம் மனந்திரும்பும் வரைக்கும் தேவனுடைய கரம் நம்மை நெருக்கி நமக்கு விரோதமாக இருக்கும்!*

*உபாகமம் 31:14-23*

*மனந்திரும்பாத இஸ்ரவேல் ஜனங்களுக்கு என்ன நேரிடும் என்று தேவன் வெளிப்படுத்துகிறார்! அவர்களுக்கு ஒரு பாடலை கொடுத்து தொடர்ந்து நன்றியுள்ளவர்களாக இருக்கவும் மனந்திரும்பவும் உதவி செய்தார்!*

*உபாகமம் 32ல் உள்ள பாடலை தியானியுங்கள்.*

*உங்களுடைய கடந்த காலம், தேவன் எப்படி உங்களை விடுவித்து இதுவரை உங்களுக்கு கொடுத்த ஆசிர்வதங்கள் மற்றும் நிச்சயமாய் எதிர்காலத்தில் எதையெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள் என்பதையும் ஒரு கதையாக எழுதுங்கள். தொடர்ந்து அதை படித்து தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.*

*தேவனுக்கு நன்றியுணர்வை காட்டும் விதமாக உங்கள் காணிக்கை, விதவைகள் மற்றும் ஏழைகளுக்கு உதவுதற்காக அதிகதிமாக கொடுங்கள்!*

*<u>11 - தேவனுடைய கரத்திற்கு முன்பாக எந்த சுவரும் வலிமையானதல்ல</u>*

*யோசுவா 6*

*மோசேவுக்கும் தேவனுக்கும் முன்பாக இஸ்ரவேல் ஜங்கள் முறுமுறுத்தது நினைவிருக்கிறதா?*

*உபாகமம் 1:27,28*

*அந்த நேரத்திலும் தேவன் அவர்களுக்கு மிகவும் பொறுமையாகவும் சாந்தமாகவும் பதில் அளித்தார்.*

*பத்து வாதைகளால் எகிப்து ஜனங்களை வாதித்தது, செங்கடலை இரண்டாக பிளந்தது, எகிப்தின் இராணுவங்களை அழித்தது, வானத்திலிருந்து மன்னாவை வரவழைத்து அவர்களுக்கு உணவளித்தது, கன்மலையிலிருந்து தண்ணீர் வரவழைத்தது..... போன்ற அநேக அற்புதங்களை தேவன் அவர்களுக்கு செய்திருந்தும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசங்களின் மதில்களை பார்த்ததும் அவர்கள் பயந்து போனார்கள்.*

*அவர்கள் பார்த்து பயந்த தேசங்களில் முதலாவது தேசத்திற்கு தேவன் அவர்களை அழைத்து வந்தார்! தேவன் அவர்களுக்காக யுத்தம் செய்வார் என்பதையும் இஸ்ரவேல் ஜனங்கள் வெறும் அந்த தேசங்களை கைப்பற்ற வேண்டும் என்பதையும் காண்பிப்பதற்காக அப்படி செய்தார்.*

*அவர்கள் ஏழு நாட்கள் அந்த மதில்களை சுற்றிவந்து, ஏழாவது நாள் தங்கள் சத்தத்தை உயர்த்தியதால் தேவன் வானம்வரை உயர்ந்திருந்த சுவர்களை விழ செய்தார்! எது அந்த மதில்களை விழ செய்தது?*

*அவர்கள் சுற்றி வந்ததாலா? அவர்கள் சத்தத்தை உயர்தியதாலா? அல்லது நம்மால் பார்க்க முடியாத தேவனுடைய கரத்தாலா?*

*தேவனுடைய கரத்தினால் தகர்க்க முடியாத எதாவது மதில்கள் இருக்கிறதா?*

*இந்த நிகழ்ச்சி நடந்து பல நூற்றாண்டுகளுக்கு பின்பு,*

*நீங்கள் இன்று எப்படிப்பட்ட மதில்களுக்காக பயப்படுகிறீர்கள்? உங்கள் பட்டணங்களில் எந்த இடங்களில் தேவனுடைய நற்செய்தியை அறிவிக்க முடியாது என்று நினைக்கிறீர்கள்?*

*எப்படிப்பட்ட மனிதர்களுக்கு வசனங்களை புகுத்த முடியாது மிகவும் கடுமையான கரியம் என்று நினைக்கிறீர்கள்?*

*இப்படி நினைப்பதால் அந்த மனிதர்களையும் தேவனையும் தாவறாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று தான் அர்த்தம்! இதனால் தேவன் மிக பெலவீனமானவர்  அவரால் அந்த சுவர்களை உடைக்க முடியாது என்று சொல்கிறீர்கள்!*

*இப்படி நினைப்பதால் நீங்கள் தேவனை அவமதிக்கிறீர்கள் அல்லவா? இது தான் நாம் தேவனுக்கும் செய்யும் மிக மோசமான காரியமாகும்! ஆனால் அதற்கு பதிலாக தேவனால் இந்த காரியத்தை செய்ய முடியும் இந்த மதில்களை அவரால் உடைக்க முடியும் என்று முழுமையாக நம்பும் போது நாம் தேவனை மகிமைப்படுத்தி அவரை கனப்படுத்துகிறோம்! அதனால் நாம் நம்புவதை அவர் வாய்க்க செய்வார்!*

*நீங்கள் தேவனுக்கு சாட்சியாக இருக்கப்போகும் காரியங்களை எழுதி அதற்காக ஜெபம் செய்யுங்கள். நாம் எழுதி அந்த காரியங்களை தேவன் வாய்க்க செய்யும் போது அதை எழுதி அடுத்த வரும் தலைமுறைகளுக்கு கேட்டு அவர்களும் இந்த விசுவாசத்தில் வளர உதவி செய்யுங்கள்.*

*12 - தேவனுடைய கரம் வானமண்டலத்தையே சுழற்றிவிடும்*

*யோசுவா 10:1-14*

*ஐந்து எமோரிய இராஜாக்கள் தங்கள் சேனைகளை சேர்த்துக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக போரிட்டார்கள். தேவனுடைய பயம் மற்றும் அவர் எப்படி தாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திலுள்ள ஜனங்களை அனுப்பி இஸ்ரவேல் ஜனங்களுக்கு எப்படி உதவினார் என்பதை பாருங்கள். அந்த தேசத்திலுள்ள மக்கள் ஒன்றாக சேர்ந்து இஸ்ரவேல் ஜனங்களை ஜெயித்துவிடாலாம் என்று நினைத்திருக்கலாம்!*

*கிபியோனியர்களுடைய இடம் மிகவும் முக்கியமானதாகவும் மற்ற பட்டணங்களைவிட பெரியதும் அவர்களிடத்தில் திறமையான போர்வீரர்கள் இருந்தும், தங்கள் வசித்து வந்த இடத்தை இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் ஒப்புக் கொடுத்து மிகவும் ஞனமாக நடந்து கொண்டார்கள். (யோசுவா 10:2)*

*அந்த ஐந்து இராஜாக்களும் கிபியோனுக்கு எதிராக போரிடும் போது கிபியோனியர்கள் யோசுவாவினடத்தில் உதவி நாடினார்கள்.*

*யோசுவா அதை ஏற்றுக் கொண்டு தம்முடைய படைகளை சேர்த்து எதிரகளுக்கு நேராக புறப்பட்டான்.*

*உடனடியா தேவன் யோசுவாவோடு பேசி "அவர்களுக்கு பயப்படாதே அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன். அவர்களில் ஒருவனுன் உனக்கு முன்பாக எதிர்த்தி நிற்பதில்லை" என்றார். நாம் எப்போதெல்லாம் தேவனுடைய காரியத்தை செய்ய நினைத்து அதை தொடங்குகிறோமோ, அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் தேவன் நம் பக்கத்திலிருந்து நமக்கு வெற்றியைத் தருவார்.*

*எப்படி இஸ்ரவேல் ஒரு சிறு தேசமாக மிகவும் குறுகிய படைகளைக் கொண்டு அந்த ஐந்து தேசங்களை வெல்ல முடிந்தது? தேவன் நமக்காக போரிடும் போது எதுவும் முடியாதது அல்ல!*

*அது யுத்தத்தை வென்றது யோசுவாவுடைய வல்லமையோ அல்லது அந்த படைகளுடைய வல்லமையோ கிடையாது. தேவனுடை கரம் அதை வென்றது!*

*முதலாவது அந்த தேசங்களுடைய படைகளுக்கிடையே தேவன் குழப்பத்தை ஏற்படுத்தினார் அதானால் ஓடிப் போனார்கள். (வசனம் 11)*

*இஸ்ரவேல் ஜங்களுடைய எதிரிகளிடத்தில் யார் போராடியது? இது தேவன் அவர்களுக்காக இயற்கையை கொண்டு ஒரே முறை போராடியது கிடையாது. தேவன் எப்படி அவர்களை இயற்கையை கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுடைய எதிரியான மிகவும் கொடிய தேசங்களுடன் போராடினார் எப்படி அந்த தேசங்களை அழித்தார் என்பதை வாசித்து தேவனுடைய அற்புதமான வழிகளுக்காக அவரை துதியுங்கள்! அவருடைய இரட்சிக்கும் கரத்தை விசுவாசித்தி நம்பிக்கை வையுங்கள்.*

*யோசுவா 10:12-15*

*இத்துடன் அந்த கதை முடிவடையவில்லை. தேவனின் அற்புதமான செயல்களில் இதுவும் ஒன்றாகும். அமோரியர்களுடன் போரிட்டு வெற்றிபெறுவதற்கு யோசுவாவிற்கு அதிக நேரம் தேவைப்பட்டது. அதனால் சூரியண் அஸ்தமிப்பதற்கு அதிக நேரம் கேட்டார்! இந்த ஒரு காரியம் யாராலும் கற்பனை செய்ய முடியாது. ஆனால் யோசுவாவிற்கு தெரியும் தேவனால் இந்த மொத்த உலகத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்று. யோசுவாவின் ஜெபத்தைப் பாருங்கள் அவர் எப்படி இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக ஜெபித்தார் என்று. அவர் தேவனே உங்களால் முடிந்தால் இதை செய்யுங்கள் என்று சொல்லவில்லை! தேவன்மேல் அவர் வைத்திருந்த தைரியதை பாருங்கள்! தேவன் யோசுவாவின் விசுவாசத்தையும் வைராக்கியத்தையும் பார்த்து பிரியப்பட்டு அந்த நாளில் 12 மணிநேரத்தை கூட்டினார்!*

*தேவன் எப்படி அதை செய்தார்? அது எப்படி நடந்தது என்று நமக்கு தெரியாது ஆனால் ஒரு காரியம் உறுதியானது அங்கே ஒரு அற்புதம் நடந்தது! நாம் வழிபடும் தேவனால் இந்த மொத்த வானம் மற்றும் பூமியையும் கட்டுப்படுத்த முடியும்! தேவன் மேல் நம்பிக்கை வைத்து (யோசுவாவை போல்) மிக தைரியமாக நம்முடைய சிந்தனையையும் யோசனைகளையும் தவிர்த்து தேவனிடத்தில் கேட்போம்!*

*உங்களுடைய அற்புதங்களின் ஜெபப்பட்டியலை எழுதுங்கள்.*

*தேவன் உங்களுக்கு அதை ஏற்கனவே தந்துவிட்டார் என்று விசுவாசியுங்கள் (மாற்கு 11:24)*

*தேவன் பதிலளித்த ஜெபங்களை எழுதி தேவனை மகிமைபடுத்துவதர்காக மற்றவர்களிடம் பகிந்து கொள்ளுங்கள்.*

*13 – வாக்குத்த்தங்களை நிறைவேற்றுகிற தேவன்*

*இதற்கு பின்னால் கற்றுக்கொண்ட பாடங்களில் நாம் தேவனின் வாக்குத்தத்தைப் பற்றிப் படித்தோம். அந்த வாக்குத்தங்கள் நமக்கு மிகமிக பெரியவைகளாக இருந்தன. இப்பேர்பட்ட வாக்குத்தங்கள் நமக்குள் ஒரு சந்தேகத்தை எழுப்பும்.*

*கர்த்தரால் இவ்வளவு செய்ய முடியுமா?*

*கர்த்தர் மேல் விசுவாசம் வைக்கிறவர்கள் தேவனுடைய வாக்குத்தங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் நிறைய நடந்தேறி இருப்பதை உணர்ந்த்ஹு இருப்பார்கள். அப்படியே யோசுவாவும் ஒரு அபூர்வமான விசுவாசியாக இருந்தான். அவனை சுற்றி அனைவருமே கர்த்தர் மேல் அவிசுவாசமாக இருந்த போதிலும், அவன் எழுந்து மக்களுக்கு விரோதமாக போய் கர்த்தரை விசுவாசித்து, அவிசுவாசிகளுக்கு சவால் விட்டான். யோசுவா விசுவாசித்தப்படியே கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறியது.*

*எகிப்தில் இருந்து அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு கர்த்தர் அவர்களை கூட்டிச் சென்றார். அவர்கள் வனாந்திரத்தில் கானான் தேசத்திற்கு வெகு அருகில் இருக்கும் போது 12 உளவாளிகளை கானான் தேசத்திற்குள் உளவி வர அனுப்புமாறு மோசேக்கு கர்த்தர் சொன்னார். அவர்கள் போய் அந்த இடத்தில் பாலும் தேனும் ஓடுகிறதை கண்டார்கள். அவர்களில் 10 பேர்களுக்கு, இந்த இடத்தை கைப்பற்ற உதவுவார் என்ற விசுவாசம் இல்லாமல் இருந்தது. தான் கொடுத்த வாக்குத்தத்தை கர்த்தர் நிறைவேற்றுவார் என்ற விசுவாசம் யோசுவாவுக்கும் காலேபுக்கும் மட்டுமே இருந்தது. அந்த 10 பேரும் இஸ்ரவேலரையும் கலங்கடித்து நாம் அந்த நாட்டுக்கு சென்றால் நிச்சயமாக ஏனாக்கின் குமாரரின் கைக்கு அழிந்து விடுவோம் என்று சொல்லி தேவனுக்கும், மோசேவுக்கும் எதிராக நின்றார்கள்.*

*எண்ணகமம் 14:6-9*

*யோசுவாவுக்கும், காலேபுக்கும் தேவன் மேல் எவ்வளவு விசுவாசம் இருந்தது என்றால், அவர்கள் விசுவாசமற்ற கோடிக்கணக்கான இஸ்ரவேலர் முன்னே நின்று கர்த்தர் மேலும் அவருடைய வாக்குத்தத்தின் மேலும் அவர்களுக்கு இருந்த அசைக்க முடியாத விசுவாசத்தை பறைச்சாற்றினார்கள்.*

*கர்த்தரின் விசுவாசிகளான யோசுவா மற்றும் காலேபை பார்த்து சந்தோஷமடைந்தார் ஆனால் அவிசுவாசிகள் மீது கோபம் கொண்டார். அதனால் அவர்கள் பாலைவனத்தில் 40 நாட்கள் சுற்றி அலைந்து அழியவேண்டுமென்று சாபம்கொடுத்தார் யோசுவா மற்றும் காலேப் மட்டுமே வாக்குத்தத்தின் பிரதேசத்திற்குள் நுழைய முடிந்தது. பின்பு தேவன் யோசுவாவிற்கு இந்த ஒரு பிரமாணத்தை கொடுத்தார்.*

*14 பெலனற்றவனை தேர்ந்தெடுத்து கர்த்தரின் வல்லமையான கரங்களைப் பற்றி ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார்*

*கர்த்தர் எப்போதுமே பெலவீனமானவனையோ அல்லது சாதாரண மனிதனையோ தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலமாக கர்த்தரின் மகிமையை வெளிப்படுத்துகிறார். ஏனென்றால் தேவனுடைய நாமத்திற்கு புகழ் உண்டாகக்கடவது என்று.*

*இளைஞனான தாவீதை தேர்ந்தெடுத்து இராட்சதரான கோலியாத்தை கொன்று பெலிஸ்த்தருக்கு எதிராக போரை முறியடிக்க செய்தார்.*

*இளைஞனான சாமுவேலை பயன்படுத்தி ஏலீ மற்றும் அவருடைய குடும்பத்தைப் பற்றி தீர்க்கதரிசனம் செய்தபின், இஸ்ரவேலையும் வழிநடத்திச் சென்றார்.*

*அநேக தீர்க்கதரிசிகள் வெகு சாதாரன மக்களாக இருந்தாலும், அவர்கள் மூலமாக அளவுக்கு அதிகமான தீர்க்கதரிசனம் சொல்லியும், நம்பமுடியாத அற்புதங்களை செய்தார்.*

*மோசேயினால் சரியாக பேசக்கூடாது. இருந்தாலும் அவரை உபயோகித்து மகா கோரமான எகிப்தை கால் முடங்க செய்தார். பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.... (எபிரேயர் 11 படித்து பாருங்கள், இன்னும் அதிகமாக புரியும்)*

*நியாதிபதிகள் 6:1-6*

*இஸ்ரவேலரின் பாவங்களின் நிமித்தம் அவர்களை கர்த்தர் மீதியானியரிடம் ஒப்படைத்தர் மீதீயானியர் மிக வல்லமையுயவர்கள் அவர்கள் இஸ்ரவேலரை அதிகமாக கொடுமைப் படுத்தியதால் இஸ்ரவேலர் மலைகளிலும், கிகைகளிலும் ஒளிந்து கொள்ள இடம் பண்ணினார்.*

*மீதியானியரின் கொடுமையினால் இஸ்ரவேலர் துன்பப்பட நேர்ந்ததை பாருங்கள்!*

*இந்த கொடுமை தாங்க்க முடியாமல் அவர்கள் க்ர்த்தரை நோக்கி கதறி அழுத போது, அவர்களை விடிவிக்க கிதியோனை கர்த்தர் அனுப்புகிறார்.*

*நியாதிபதிகள் 7*

*இந்த வசனங்களை படிக்குஒம் போது. கர்த்தர் எப்படி கிரியை செய்கிறார் என்று ஆயிரமாயிரம் இஸ்ரவேலர்கள் ஒன்றாக கூடி மீதியானியரிடம் போர் செய்ய தயாராகும் போது, கர்த்த அவர்களை நிறுத்தி 300 பேர் மட்டும் கிதியோனுடன் போருக்கு சென்று, கணக்கில்லாத மீதியானியரிடம் போர் செய்ய சொல்லுகிறார். கர்த்தர் எதற்கு நிறைய இஸ்ரவேலரை திரும்பி போகச் சொல்லுகிறார். யோசியுங்கள் மிகப்பெரிய செனை ஒன்றாக செர்ந்து, போரில் வெற்றிப் பெற்றால், அந்த பெருமை சேனையையே சேரும், கர்த்தரை அல்ல; ஏனென்றால் கர்த்தரே யுத்தம் செய்து வெற்றியைப் பெற்றார்! தேவனுக்கே மகிமை சேர அவர் இப்படிச் செய்தார். 300 பேரை கொண்ட சேனை, கணக்கில்லாத வீரர்களை கொண்ட சேனையை தோற்க்கடிப்பபது, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விஷயமாக இருக்கிறது. உலகப் பிரகாரமாகப் பார்க்க்கும் போது இப்படி முடியும் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது!*

*தேவன் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நினைத்து பாருங்கள்.*

*உபாகமம் 1:29-30இன்னுமாக இங்குப் பார்க்கிறோம், எப்படி கர்த்தர் நம்மௌடைய பெலவீனங்களை புரிந்து கொண்டு, நம்மை திடப்படுத்துகிறார் என்பதை மறுபடியும் படியுங்கள்*

*நியாதிபதிகள் 7:9-16, 9-12*

*அப்போது கிதியோன் எழுந்து மீதியானியரின் முகாமிற்கு போய், பார்த்து, கர்த்தர் சொன்னதை நினைவுகூர்ந்து பெலன் பெற்றான்!*

*வசனம் 13-15*

*பாருங்கள் தேவன் எப்படி வேலை செய்கிறார். தேவன் எதிரிகளின் மனதில் கனவுகளை வைத்து அவர்களை பயங்கொள்ள வைக்கிறார்! கிதியோன் அந்தக் கனவைப் பற்றி மீதியானின் வீரர்கள் பேசுவதையும், அதன் அர்த்தத்தையும் கேட்டு, கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வெற்றிப் பெற வல்லமையாய் வேலைச் செய்கிறார் என்பதை அறிந்து கொண்டு அங்கேயே, அப்போழுதே கர்த்தரை தொழுது கொண்டான். அதுவுமில்லாமல் 300 வீரர்களை கூட்டிக்கொண்டு தைரியமாக போய் மிகப்பெரிய சேனையை வெற்றிக் கொண்டான். (வசனம் 22)*

*15 கர்த்தரை மகிமை செய்ய நினைப்பவர்களின் வாழ்க்கையில் அவருடைய கரம் வேலை ச் செய்கிறது*

*எசேக்கியா யூதாவின் அரசனாக இருந்தான். இஸ்ரவேல் இரண்டு ராஜ்ஜியங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. யூதா (தெற்கு ராஜ்ஜியம் எருசலேமை தலைநகரமாக கொண்டிருந்தது) மற்றும் இஸ்ரவேல் (வடக்கு ராஜ்ஜியம் சமாரியாவை தலைநகரமாக கொண்டிருந்தது) எசேக்கியா அரசாண்ட புதிதில், அசீரியா இஸ்ரவேலை முற்றுகையிட்டு நாட்டை அழித்து நிறைய இஸ்ரவேலரை பினைக் கைதிகளாக கொண்டு அசீரியாவுக்கு போனான். இது இரண்டு ராஜாக்கள் 18ன் முன் பகுதியில் பார்க்கிறோம்.*

*அசீரியா மிக்க பலசாலிகளாகவும் கொடூரமானவர்களாகவும் இருந்தார்கள். கொடுமைக்கு பேர் போனவர்களுமாக இருந்தார்கள், மறுபடியுமாக யூதாவை முற்றுகையிட்டு கைப்பற்றப் பார்க்கிறார்கள். அவர்கள் நினைத்தார்கள் ஒரு சிறிய ராஜ்ஜியம் கைப்பற்றுவது சுலபமானது என்று. ஆனால் அந்த சிறிய மகத்துவமான தேவனை வணங்குகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.*

*2ராஜா 18 :17, 19:37 படித்துப் பாருங்கள்*

*அசீரியர்களின் கடிதத்தை பார்த்தவுடன் எசேக்கியா என்ன செய்தான் என்று பாருங்கள்! அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது ஆனாலும் அவன் சர்வவல்ல தேவனிடம் அடைக்கலம் கொண்டான். அவனுடைய ஜெபத்தைப் படியுங்கள் 2 இராஜா 18:14-19. வேறு எந்த ராஜ்ஜியத்தின் தேவர்களும் அசீரிய ராஜாவின் கையிலிருந்து அவர்களின் ராஜ்ஜியத்தை காப்பாற்ற முடியவில்லையென்று அசீரியர்கள் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தார்கள்! அதனால் யூதா ராஜ்ஜியத்தின் மக்களிடம் எசேக்கியா நம் கர்த்தர் நம்மை விடுவிப்பார் என்று சொன்னால் அதை நம்ப வேண்டாம் என்று அசீரியர் அவர்களை பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.*

*ஆனால் அந்த அசீரியர்கள் தேவர்கள் என்று அழைக்கப் பட்டவர்கள் வெறும் மரம் மற்றும் கல் என்று எசேக்கியாவிற்கு தெரிந்திருந்தது. படியுங்கள் வசனம் 18.*

*எசேக்கியா வணங்கிய சர்வ வல்ல தேவனிடம் அவன் கேட்டுக்கொண்டது என்னவென்று கவனியுங்கள், வசனம் 19. எசேக்கியாவின் ஜெபம் எப்படியாக இருந்தது என்றால் தேவன் அவர்களை காப்பாற்றப் போவது அவனுடைய நலத்திற்காகவோ அல்லது ஜனங்களின் நலனுக்காகவோ இல்லாமல் தேவனின் நாமத்தின் மகிமைக்காகவே மாத்திரம்!*

*கவனியுங்கள் எப்படி ஜெபிக்கிறார்கள் என்று வசனம் 19 அவர்களை பயமுறுத்திய அசீரியர்களை கர்த்தர் எதிர்த்து போராடி அவர்களுக்கு விடுதலை கொடுத்து எல்லா ராஜ்ஜியங்களும் இதைப் பற்றி அறிய வேண்டும் என்றும் உணர வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோள்!*

*முழு ராஜ்ஜியமும் பயமுறுத்திய போதும் தாவீது கூட கோலியாத்தை முறியடிக்க இப்படி தான் ஆசைப்பட்டான். கர்த்தரின் நாமம் மட்டுமே மகிமைப்பட வேண்டும் என்று நாம் விரும்பினால் நாம் கேட்டுக்கொண்ட ஜெபத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார், அவருடைய நாமம் மகிமைப்பட!*

*நீங்கள் எப்படி ஜெபிக்கிறீர்கள்? உங்கள் ஜெபம் உங்கள் சந்தோஷத்திற்காகவும் உங்கள் மகிமைக்காகவும் இருக்கிறதா?*

*கர்த்தர் மனிதனை படைத்த நோக்கமே அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக தான் என்பதை நினைத்துப் பாருங்கள் (ஏசா 43:7) கர்த்தரின் மகிமையை நாடும்போது நம்மை படைத்தவரின் நோக்கத்தை பூர்த்தி செய்கிறோம்.*

*இந்த விசுவாசமான ஜெபத்தை எசேக்கியா ஜெபித்த பின்பு கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசிக்கு ஒரு செய்தியை அனுப்புகிறார் வசனம் 22,23 மிகவும் முக்கியமான செய்தியாகும்.*

*கர்த்தர் சொல்லுகிறார் அசீரியர், எசேக்கியாவையோ, யூதா ராஜ்ஜியத்தையோ அவமானப் படுத்தவில்லை. ஆனால் அவர்களின் பயமுறுத்துதல் தேவாதி தேவனை நிந்தித்து தூஷிப்பதாகும். தேவனை தூஷிப்பது அவருக்கு சகிக்க முடியாததாக இருக்கிறது.*

*தூஷிப்பது மகிமைப் படுத்துவதற்கு எதிராக இருக்கிறது. யாரெல்லாம் அவர் நாமத்தை தூஷிக்கிறார்களோ அவர்களை தேவன் அழித்துப் போடுகிறார். ஆனால் அவர் நாமத்தை மகிமைப் படுத்துபவர்களை தூக்கி எடுத்து பாதுகாக்கிறார்.*

*அவரை தூஷிக்கிறவர்களுக்கு எதிராக அவர் தன் கையை உயர்த்துகிறார். தேவனின் பலத்த கரம் எனென செய்த்து என்று பாருங்கள்:*

*மறுபடியும் படியுங்கள் வசனம் 32-37*

*அசீரியர் கையில் இருந்து யூதாவுக்கு விடுதலை தருவதாக வாக்குத்தத்தம் பண்ணிய தேவன் அன்று இரவே அதை செய்தார்! ஒரே ஒரு தேவதூதன் 185000 பராக்கிரமசாலிகளான வீரர்களை அசித்துப் போட்டான்!*

*எசேக்கியாவும் அவர் சேனையும் அவர்களை எதிரிடளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள ஓறுமே செய்ய தேவையில்லைமல் போயிற்று, அவர்கள் தங்களுடைய வாளை உயர்த்தி போர் செய்யக்கூடாமல் போயிற்று!*

*இதெல்லாம் கர்த்தருடைய பலத்த கரத்தால் நடந்து முடிந்தது! கதை இதோடு முடிந்து போகவில்லை. ராஜா சனகெரிப்பும் தன்னுடைய சொந்த மகனால் கொள்ளப் பட்டான். பாருங்கள் தேவன் எப்படி ஒரு வழியை கண்டுபிடித்தார். அவன் தன் கடவுளை வணங்கிகொண்டிருக்கும் போது அவனை வாளால் வெட்டிப் போட்டார்கள்.*

*அவன் விசுவாசித்த கடவுள் அவனுக்கு ஒரு சிறு ராஜ்ஜியத்தை கைப்பற்றவும், அவனுடைய உயிரை அவன் மகன் களிடமிருந்து காப்பாற்றி கொள்ளவும் உதவிசெய்யவும் இல்லை.*

*நீங்கள் கர்த்தர் மேல் முழு விசுவாசம் வைத்திருக்கிறீர்களா? உங்களுக்கு கர்த்தரை தவிர வேறு எதின் மேலாவது பயம் இருக்கிறதா? உங்களுடைய வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதற்காக இருக்கிறதா?*

*நம்முடைய ஜெபம் தேவனை மகிமைப்படுத்துவதில் நோக்கமாக இருக்கிறதா? எசேக்கியாவைப் போல ஜெபம் செய்து பாருங்கள், கர்த்தர் எப்படி வேலை செய்கிறார் என்று!*

## *16 கர்த்தருடைய கரம் மிகப்பெரிய எழுப்புதலை கொண்டுவரும்*

*II நாளாகமம் 30*

*இஸ்ரவேல் தேசமானது இரண்டாக பிரிந்த்து, வடக்கில் இஸ்ரவேலாகவும் தெற்கில் யூதாவாகவும் பிரிந்தது. ரெகோபெயாம் என்னும் அரசனால் இஸ்ரவேல் ஜன்ங்கள் விக்கிரகராதனை செய்யத் தொடங்கினாரகள். யூதா தேசம் தாவீதின் சந்த்தியாரால் தொடர்ந்து ஆளப்பட்ட்து. ஆகாஸ் என்னும் அரசன் யூதாவின் ராஜாக்களிலேயே மிகவும் மோசமானவனாக இருந்தான். அவம் யூதாவின் ஜன்ங்களை விக்கிரகராதனைக்கும் மற்ற தீயவழிகளிலும் ஈடுபட செய்தான். ஆனால் அவனுடைய மகன் எசேக்கியா தேவனை முழு இருதயத்தோடு அன்பு செய்து முற்றிலும் மாறுபட்டு இஸ்ரவேல் ஜன்ங்களை மறுபடியும் தேவனிடமாக திருப்பி ஒரு எழுப்புதலை கொண்டு வந்தான்.*

*எசேக்கியா அரசாண்ட ஆறாம் ஆண்டில், இஸ்ரவேல் ஜன்ங்கள் அசீரியர்களால் அழிக்கப்பட்டு சிலரை கொண்டுபோனார்கள் சிலரை அந்நாட்டிலேயே விட்டு சென்றார்கள் (II இராஜா 18:10). அந்த ஜனங்கள் தேவனை விட்டு மற்ற விக்கிரகங்களை வழிபட்டதால் இது நடந்தது (II இராஜா 17).*

*பல தலைமுறைகளாக யூதாவின் ஜனங்கள் பஸ்கா பண்டிகையை கொண்டாடப் படவில்லை. எசேக்கியா ராஜா அந்த பண்டிகையை கொண்டாட விரும்பி மற்ற நாடுகளில் இருந்த யூதாவின் ஜன்ங்களுக்கும் அறிவித்தான். அவனுடைய எண்ணம் வெறும் யூதாவின் ஜனங்கள் மட்டுமல்ல மொத்த இஸ்ரவேல் ஜனங்களும் தேவனை வழிபட வேண்டும் என்று இருந்தது.*

*II இராஜா 30:10-14*

*சில ஜன்ங்கள் எசேக்கியாவின் தூதுவர்களை கேலி செய்தார்கள். ஆனல் சிலர் தங்கள் தாழ்மைபடுத்தி எருசலேமிற்கு சென்றார்கள். ஆனால் தேவனுடை கரத்தினால் அவர்கள் ஒருமனப்பட்டு ராஜா கட்டளையிட்ட்தை செய்தார்கள். எசேக்கியா இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ஜனங்கள் தேவனை வழிபடவேண்டுமென்று தன்னுடைய முழு இருதயத்தோடு செயல்பட்டான். அது தேவனுக்கு பிரியமானதாக இருந்ததால் தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்பட செய்து எசேக்கியாவின் திட்டங்களை நிறைவேற செய்தது.*

*அவர்களுடைய இருதயம் தேவனுடைய கரத்தால் நகர்த்தப்பட்டு எல்லோரும் எருசலேமிற்கு வந்து பஸ்க பண்டிகையை கொண்டாடி அவர்களுடைய விக்கிரகராதனையை ஒழித்து பரிசுத்த இருதயத்தோடு உண்மையான தேவனை வழிபட்டார்கள். அவர்கள் அந்த கொண்டாட்ட்தை நீடிக்க செய்தார்கள் (வச 23).*

*நீங்கள் எவ்வளவு நேரம் தேவனை ஆராதிப்பதில் செலவிடுகிறீர்கள்? உங்களுடைய வேதவாசிப்பிலும் ஜெபநேரத்திலும் உற்சாகமாக இருக்கிறீர்களா? சபை கூட்டங்களுக்கு செல்வதில் சந்தோசப்படுகிறீர்களா? அல்லது வெகு நேரமாக இருக்கிறது என்று குறைசொல்லி பாரமாக உணருகிறீர்களா? ஆனால் இந்த ஜன்ங்களுக்கு வெகு தொலைவில் சென்று ஒரு வாரம் கழித்து, அந்த நேரம் போதவில்லையென்று மறுபடியும் ஒரு வாரம் அந்நியோன்யத்தில் செலவிடவிரும்பினார்கள்!*

*உங்களுடைய வாழ்க்கையில், குடும்பத்தில், சபையில் எப்படிப்பட்ட ஆவிக்குரிய எழுப்புதல் தேவைப்படுகிறது? அது ஒருவேளை உங்களுடை விக்கிரகங்களான பேராசை, அசுத்தம், உலகப்பிரகாரமான இச்சைகள், சுயநலம், பெருமை ஆகியவைகளை அழிக்க வேண்டியதாக இருக்லாம். உங்களுடைய விசுவாசத்தை மற்றவர்களிட்த்தில் பகிர்ந்து கொள்ள வேண்டியதாகவும் இருக்கலாம். நீங்கள் அதை புதுபிக்க தயாராக இருக்கிறீர்களா? தேவனுடை கரம் உங்களுடை வாழ்க்கையில் வல்லமையாக செயல்பட நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் எழுப்புதலை உண்டாக்க ஒரு ராஜாவாகவோ அல்லது தலைவராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு இயேசு மிகப்பெரிய உதாரணமாக இருந்து எந்த பதவியும் இல்லாத ஒரு சாதாரண மனிதனாக ஒரு மிகப்பெரிய எழுப்புதலை உண்டாக்கினார். மற்ற்வர்களுடை ஆவிக்குரிய நிலையைப் பார்த்து இருதயம் நகர்த்தப்பட்டு ஒரு எழுப்புதலை உண்டாக்கினார்.*

*மாற்கு 9:35-38*

*இயேசு மற்றவர்களுடைய தேவைகளை பார்த்தபோது அவருடைய மனதுருகினார். உங்களுடை இருதயமும் கண்களும் உங்களை சுற்றியுள்ள தொலைந்து போன மக்களுடைய தேவைகளை காணும்படி திறக்கும்படி தேவனிடம் ஜெபியுங்கள். அவர்களுடைய பெயர்களை எழுதி அவர்களுக்காக தேவனுடைய உதவியை எடுத்துக் கொண்டு உங்களை சுற்றியுள்ள மற்ற சீஷர்களுடன் சேர்ந்து ஒரு எழுப்புதலை உருவாக்குங்கள்.*

*17 தேவனுக்கு துதிகள் பாடி யுத்தத்தை வெற்றிகொள்ளுதல்*

*2 நாளாகமம் 20:1-30 படிக்கவும்*

*மோவாபியர்கள், அம்மோனியர்கள் மற்றும் சில மியுனியர்கள் சேர்ந்து யூதா தேசத்தை தாக்கினார்கள். ஒரு மிகப்பெரிய ராணுவம் ஒரு சிறிய நாட்டை எதிர்த்து போரிட்டது. யோசபாத் அந்த நேரத்தில் யூதாவின் ராஜாவாக இருந்தான். தேவனை நம்பி நடக்கிற ஒரு நல்ல ராஜாவாக இருந்தான். அவனுக்கு ஒரு அந்த ராணுவத்திடம் அர்ப்பணிப்பது அல்லது எதிர்த்து போராடி தோல்வி அடைவது என்ற இரண்டு வாய்ப்புகள் தான் இருந்தது. ஆனால் அவர் அதை செய்யாமல் தேவனுடைய பலத்த கரத்திலிருந்து உதவி பெறுவதற்காக ஜெபித்தார்.*

*2 நாளாகமம் 20:12-17 படிக்கவும்*

*யோசபாத்தும் அவனுடைய ஜனங்களான யூதா தேசத்தாரும் தேவன் அவர்களுக்கு எப்படி உதவுவார் எனறு அறியாதிருந்தும், தேவனுடைய வாக்குத்தங்களை நம்பினார்கள். ஏனென்றால் அந்த மிகப்பெரிய ராணுவம் எதிர்த்த போதும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி அதற்காக தேவனை ஆராதித்து துதித்தார்கள். யோசபாத் எப்படிப்பட்ட ராணுவ வழிநடத்துதலை அவன் மக்களுக்கு கொடுத்தான் என்பதை பாருங்கள்.*

*2 நாளாகமம் 20:21-23*

*அவர்கள் எப்படி யுத்தத்தை ஜெயித்தார்கள் என்பதைப் பாருங்கள்! பாடல்கள் பாடி தேவனை துதித்தார்கள். அவர்கள் பாடல்களை பாடின போது தேவன் அந்த ராணுவத்தை பதுங்கி தாக்கும்படி அம்மோன் மற்றும் மோவாப் புத்திரரை கொண்டு தோற்கடித்தார். அவர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணி அவர்களுக்கு எதிராக அவர்களே போரிடும்படி செய்து ஒருவரையொருவர் கொன்று போட்டார்கள்!*

*நீங்கள் இப்படிப்பட்ட சவால்களை சந்திக்கும்போது என்ன செய்வீர்கள்? கவலைப்படுவீர்களா அல்லது துதிப்பீர்களா? நீங்கள் தேவனிடம் சென்றாலும் கூட உங்கள் ஜெபம் எப்படி இருக்கும்? சந்தேகத்துடன் "தேவனே உம்மால் செய்யக்கூடுமா.... என்று கேட்பீர்களா அல்லது முழுமையாக நம்புவீர்களா? அந்த சூழ்நிலைகளில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூறுகிறீர்களா?*

*தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறீர்களா? எந்தெந்த வாக்குத்தத்தங்கள் உங்கள் வாழ்க்கையில் நடந்திருக்கிறது என்ன சாட்சி கொடுக்கிறீர்கள்?*

*அடுத்த முறை வாழ்க்கையில் போராடங்களை சந்திக்கும் போது தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்து அந்த சவால்களைக் குறித்து கவலைப் படாமல் தேவன்மீது நம்பிக்கை வைத்து, அவரை துதித்து, தேவன் உங்கள் வாழ்க்கையில் வல்லமையாக கிரியை செய்வதைப் பாருங்கள்!*

*18 உங்களுடைய கதை – உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடயச் செயல்*

*சங்கீதம் 118*

*சங்கீதக்காரன், அவனுடைய வாழ்க்கை அனுபவத்தை தான் நிறைய எழுதியிருக்கிறார். உங்கள் கதையை எழுதுங்கள் – கர்த்தருடைய கரம் உங்களுடைய வாழ்க்கையில் எப்படி வேலைசெய்தது? நீங்கள் எப்படி இரட்சிக்கப் பட்டீர்கள்? வேறு என்னென்ன அற்புதங்களை கர்த்தர் உங்களுடைய வாழ்க்கையில் செய்திருக்கிறார்?*

*எழுதிப் பாருங்கள் எப்படி கர்த்தரின் மறைமுகமான கரங்கள் உங்களின் வாழ்க்கையில் வேலை செய்திருக்கிறது என்று நினைத்து கர்த்தரை துதியுங்கள்.*

*இப்போது உங்கள் வாழ்க்கையில் எதையெல்லாம் சுமையாக நினைக்கிறீர்கள், எழுதுங்கள்! யோசித்துப் பாருங்கள் நம்முடைய கடந்த நாட்களில் நமக்கு எத்தனையோ விடுதலைகளை கொடுத்த தேவன் இப்போது இருக்கும் மனபாரங்களில் இருந்து நம்மை விடுதலையாக்கி நிச்சயமாக நமக்கு வெற்றியை தருவார்.*

*வரும் காலங்களில் வரப்போகிற வெற்றிகளை நினைத்து தேவனை துதியுங்கள். நிம்மதியான ஒரு வாழ்க்கையை வாழுங்கள்.*

*மாற்கு 11:24*

## *19 கர்த்தருக்கு சேவை செய்கிறவர்களின் தேவைகளை எல்லாம் அவர் சந்திக்கிறார்*

*கர்த்தருக்கு சேவை செய்யவேண்டும் என்றால் அதற்கு நிறைய தியாகம் செய்ய வேண்டும் மற்றும் நம்முடைய தேவைகளை சந்திக்க முடியாது என்று நிறைய பேர் தயங்கலாம்.*

*எலியா கடவுளுக்கு ஒரு உத்தமமான சேவகனாக இருந்தான். கோபக்காரரும், எல்லாவற்றிற்கும் வாக்குவாதம் செய்யும் ஜனங்களுமான இஸ்ரவேல் ஜனங்கள் கூட இருந்து அவர்களுக்கு போதகம் செய்ய வேண்டியதாகயிருந்தது. இது ராஜாக்களின் நேரமாக இருந்தது. இ ஸ்ரவேல் இரண்டு நாடாகப் பிரிக்கப்பட்டது. வடநாடு இஸ்ரவேலாகவும் தென்நாடு யூதாவாகவும் இருந்தது. இந்த நாடுகள் பிரிக்கப்பட தொடங்குவதற்கு முன்னமே இஸ்ரவேலர் தேவனை விட்டு பிரிந்து விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கி விட்டார்கள் ( கன்னுக்குட்டியை தொழுவதை பெத்தேலில் தொடங்கி யெரொபெயாம் உற்பத்தி செய்ட தாண் வரை) இஸ்ரவேலை ஆண்ட எல்லா அரசர்களிலும் மிக மோசமான அரசன் ஆகாப் அவன் தன் மனைவியாகிய எசபேலின் பேச்சின் படியே நடந்தான்.*

*இஸ்ரவேல் ஜனங்களுக்கு பாகாலை வணங்க வழிக்காட்டினான் மற்றும் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை எல்லாம் கொன்றுபோட்டான். கர்த்தர் எலியாவை இப்பேர்ப்பட்ட நகரத்திற்கு இந்த நேரத்திலே ஜனங்களை மறுபடியுமாக கர்த்தரிடம் கொண்டு வருவதற்காக அனுப்புகிறார்.*

*உபாகமம் 32 சொல்லுகிறது கர்த்தரை புறக்கணிக்கிற மற்றும் விக்கிரக ஆராதணை செய்கிற தேசத்தையும், அவர் என்ன செய்ய போகிறார் என்று அந்த தேசத்தை உட்படுத்துவது, ஒரு விதமான தண்டனையாக இருந்தது.*

*1 இராஜாக்கள் 17:1-6*

*கர்த்தருக்கு  விக்கிரக ஆராதனை செய்கின்ற ஜனங்கள் மேல் கோபம் மூண்டக் காரணத்தினால் மூன்று வருடங்கள் மழை பெய்யாது என்றுச் சொன்னார். நீதிமாங்களையும், அநீதிமான்களையும் கர்த்தர் ஒன்றாக சேர்த்து தண்டிக்கப் போகிறாரா? என்ன?*

*இல்லை எலியாவை பராமரிக்க கர்த்தர் திட்டம் போட்டார். எப்போதுமே நடக்க முடியாத, நம்பமுடியாதபடி ஒரு திட்டத்தை கர்த்தர் செய்தார். எலியாவை ஒரு திட்டத்தை கர்த்தர் செய்தார். எலியாவை ஒரு ஆற்றருகில் அழைத்துக் கொண்டுச் சென்று ஒளியவைத்தார். ஏனென்றால் அந்த ஆற்றில் இருந்து எலியா தண்ணீர் குடிப்பதற்காக மற்றும் காலையிலும் மாலையிலும் காகங்கள் இறைச்சியும் அப்பமும் கொண்டு வந்துக் கொடுக்க ஏற்பாடு செய்தார் நம் தேவன். இதை யார் சமைத்திருப்பார்கள் மற்றும் காகங்கள் எங்கிருந்து இதைக் கொண்டு வந்திருக்கும்? நமக்கு தெரியாது. ஆனால் கர்த்தரின் கைகள் மோசமான ஜனங்களுக்கு தண்டனையை (பஞ்சத்தை) கொடுத்து ஆனால் அவரை பின் தொடர்ந்தவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொடுத்தது! (உணவு) நம் தேவன் நியாயமானவர். அவர்மேல் விசுவாசமாக இருப்பவர்களை அவர் விசாரித்து பாதுகாக்கிறார். எலியாவை மட்டுமல்ல, இஸ்ரவேலில் இருந்த எல்லா நீதிமாங்களையும், தீர்க்கதரிசிகளையும் வழிநடத்தினார்.*

*1 இராஜாக்கள் 18:4*

*கர்த்தருக்கு சேவை செய்ய முடியாதபடி எதாவது காரணம் உங்களுக்கு இருக்கிறதா?*

*நீங்கள் கர்த்தருக்கு சேவை செய்தால் அவர் உங்களுடைய எல்லா தேவைகளையும் என்று நம்புங்கள்.*

## 22 நமக்கு கடினமாக தோன்றும் விஷயங்கள் தேவனுடைய பார்வைக்கு மிகவும் சுலபமானதாகும்

*2 இராஜாக்கள் 3*

*இஸ்ரவேலர், மோவாபியருக்கு எதிராக யுத்தத்திற்கு போனார்கள். இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராம், யூதாவின் அரசனான யோசபாத்திடம், ஏதோமின் ராஜாவிடமும் உதவி கோரியிருந்தான்.*

*இந்த படையானது , ஏழு நாட்கள் நடந்து போகும்போது குடிக்க தண்ணீர் இல்லாமல் தவித்தார்கள். மோவாபியரின் வாளால் வெட்டுண்டு சாகாமல் தண்ணீர் தாகத்தால் நாமெல்லாரும் மாண்டு அழிந்துவிடுவோம் என்று நினைத்தார்கள்.*

*யோசபாத், கர்த்தரை நம்புகிற மனிதனாக இருந்தபடியால் என்ன நடந்தது என்று படித்துப் பாருங்கள் (வச 3:11-12)*

*இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை வெறுத்து தலைமுறை தலைமுறையாக விக்கிரக ஆராதனை செய்து வந்தார்கள். தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளான எலியா, எலிசா வந்தபோது கூட அவர்கள் நிறுத்தவில்லை! தேவபயம் உள்ள யோசபாத் சொன்னதின் நிமித்தம் மட்டுமே எலிசா இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரிக்க முன் வந்தார்.*

*அதனால் ஒரு சுரமண்டலக்காரனை கொண்டு வந்து அதை வாசிக்க வைத்தான்.*

*வசனம் 3:16-20*

*வழக்கத்தைப் போல கர்த்தரின் ஆவியோ அல்லது அவர்ன் வார்த்தையோ தீர்க்கதரிசியின் மூலமாக வெளி வராமல் வசனம் 16ல் சொல்லுவது போல் கர்த்தரின் கரம் எலிசாவின் மீது இறங்கியது. பின்பு எலிசா தீர்க்கதரிசனம் உரைத்தது என்னவென்றால் கர்த்தர் மறுபடியும், காற்றும் இல்லாமல் இந்த பள்ளத்தாக்கை மிருக ஜீவங்களும் தாகத்தை தீர்த்து கொள்ள முடியும். வச 18 சொல்லுகிறது "இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்" என்று.*

*இப்பேர்ப்பட்ட விஷயம் நடக்கும் என்று நம்மால் நினைத்து கூட பார்க்க முடியாது. மழையில்லாமலும், கிணற்றை தோண்டாமலும், முழு பள்ளத்தாக்கும் தண்ணீரால் நிரம்பி வழிந்தது. நம்மால் நம்ப முடியாத விஷயம் கர்த்தருடைய பார்வைக்கு மிகவும் சுலபமானதாக இருக்கிறது.*

*மோவாபியரையும் இஸ்ரவேலர் கையில் ஒப்படைக்கலாம் என்று கர்த்தர் முடிவு பண்ணியிருந்தார். எலிசா மூலமாக கர்த்தர் சொன்ன எல்லா விஷயமும் நடந்தேறியது! தேவனால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை!*

*தேவனுக்கேற்ற சில விஷயங்கள் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறாமல் இருக்கிறதா? தேவனால் இது நிறைவேறும் என்று நினைக்கிறீர்களா? எது உங்கள் பார்வைக்கு மிகவும் கடினமாக இருக்கிறது? இந்த விஷயம் கர்த்தருக்கு மிகவும் கடிமானதா? இல்லை இது கர்த்தருக்கு மிகவும் சுலபமான விஷயம் என்று நம்புகிறீர்களா?*

*நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது என்ற விஷயங்களை ஒரு பட்டியல் போடுங்கள். பின்பு இதெல்லாம் தேவனாலே நிச்சயமாக சாத்தியம் என்று நம்புங்கள். புது நம்பிக்கையோடு இந்த விஷயங்கள் கர்த்தரின் கரத்தால் நிறைவேறுவதை காண்பீர்கள். கர்த்தரை துதியுங்கள். கர்த்தரின் வேலையை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

## 23 நம்மிடத்தில் இருக்கிற கொஞ்சத்தை பெருக செய்யும் கர்த்தரின் கரம்

*2 இராஜாக்கள் 4:1-7*

*இந்த ஏழை விதவை, கர்த்தரின் தீர்க்கதிரிசியாக இருந்த ஒருவரின் மனைவி, இப்போது அதிகக் கஷ்டத்தில் இருக்கிறார். இவளுடைய கணவன் அதிக கடன் வாங்கி திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தால், கடனைக் கொடுத்தவன் அடிமைகளாகக் கொண்டு செல்ல வந்துவிட்டான்.*

*இப்பேர்பட்ட பயங்கரமான செயல்கள் கர்த்தரை ஏற்றுக் கொள்ளாத இஸ்ரவேல் ஜனங்களிடம் மிகவும் பரவலாக இருந்தது.*

*இந்த விதவை தீர்க்கதரிசி எலிசாவின் உதவியை நாடுகிறாள் ஆனால் " உன் வீட்டில் என்ன இருக்கிறது" என்று எலியா கேட்கிறார். ஒரு குடம் எண்ணெய்யல்லாமல் உமது அடியாளுடை வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். ஒரு மனிதனுடைய யோசனையின்படி அந்த எண்ணெயை வைத்து எதுவுமே செய்ய முடியாது!. ஆனால் அந்த சிறிது எண்ணெயை கர்த்தரின் கரத்தில் கொடுத்தால், அது எவ்வளவாக மாறும் என்று நமக்கு தெரியாது.*

*எலிசா அந்த விதவையிடம் " நீ போய் உன் அயல் வீடுகளில் உள்ள அநேக வெறும் பாத்திரங்களை கேட்டுவாங்கி, உள்ளே போய் கதவைப்பூட்டி அந்த பாத்திரங்கள் எல்லாவற்றிலும் ஊற்றி, ஒவ்வொன்றாக நிரப்பு என்றார். அவளும் பிள்ளைகளும் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டு அதன்படி கீழ்படிந்து, ஒவ்வொரு பாத்திரத்தையும் நிரப்பும் போது, கடைசிப் பாத்திரம் நிரம்பியவுடன் எண்ணெய் நின்று போயிற்று.*

*அற்புதமாக வந்த அவ்வளவு எண்ணெயை விற்று, கடங்களை அடைத்து, அவர்கள் தொடர்ந்து வாழ போதுமானதாக இருந்தது. எப்படிப்பட்ட விசுவாசமான, சக்தியுள்ள கர்த்தர் நமக்கு இருக்கிறார்!*

*நாம் கஷ்டத்தில் இருக்கும் போது மற்றவர்களின் ஆலோசனையை எடுத்து கொள்ளுகிறோமாக? மற்றவர்கள் கொடுக்கிற ஆலோசனை நமது கஷ்டத்தை தீர்க்கச் சரியாக இல்லையென்று நினைத்து ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்களா? நம்மிடத்தில் இருக்கிற கொஞ்சத்தை வைத்து கொண்டு கர்த்தர் மேல் நம்பிக்கை விசுவாசத்துடன் இருக்கிறோமா?*

*2013, நவம்பர் மாதம் என் மகனின் பிறந்த நாளின் போது, உனக்கு என்ன பரிசு வேண்டும் என்று நான் அவளிடம் கேட்டேன், சிறிது நேரம் கழித்து அவன் தயங்கி தயங்கி சித்திரம் வரைவதற்கு கிராபிக் டேப்லெட் வேண்டும் என்றான். பின்பு அதன் விலை என்னவென்று கேட்டேன். அதற்கு அவள் 1000 ரூபாய் என்றான் அது எனக்கு பெரிய தொகையாக இருந்தது. அதற்கு நான், என்னிடத்தில் அவ்வளவு பணம் இல்லை என்னை மன்னிக்கவும் என்று சொன்னேன். பின்பு அதற்காக ஜெபிக்கலாம் என்று அழைத்தேன், என்னிடத்தில் போதுமான பணம் இருக்கும் போது வாங்கித் தருகிறேன் என்றேன். எனக்கு குழப்பமாக இருந்தது ஏனென்றால் என் மகன் என்னிடம் எதுவுமே கேட்பதில்லை, இருந்தாலும் அவன் இந்த பொருளை கேட்டபோது அதை வாங்கி கொடுக்க என்னால் முடியவில்லையென்றால் நான் எப்பேர்ப்பட்ட அப்பாவாக இருக்க முடியும்? எனக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய மாத காணிக்கையை குறைத்துவிட்டு தான் என் மகனுக்கு பரிசு வாங்க முடியும். ஆனால் நான மறுபடியும் யோசித்தேன், கர்த்தருக்கு கொஞ்சமாக கொடுத்து விட்டு, என் மகனுக்கு அதிகமாக கொடுப்பது நியாயமிலை என்று!*

*கர்த்தருக்கு முதலில் கொடுக்க வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். அதே வாரத்தில் எங்கள் வீட்டிற்கு மேலே வீட்டில் இருக்கிறவர்களுக்கு மெஷ் அடிக்க உதவி செய்தேன். அப்போது எந்த கிராபிக் டேப்லெட் நன்றாகயிருக்கும் என்று கேட்டேன் ஏனென்றால் அவர் ஒரு கிராபிக் சித்திர கலைஞர் என்பதை பார்த்து இருக்கிறேன். உடனே அவர் சொன்னார், என்னிடத்தில் ஒன்று சும்மா தான் இருக்கிறது அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். அதன் பின்பு ஒரு சிறு பெட்டியை திறந்து அதிலிருந்து எடுத்து என்னிடம் தந்து எடுத்து கொள்ளுங்கள் என்றார்! அதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டேன், ஒன்றுமில்லை என்றார்.*

*கர்த்தரிடமிருந்து எதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்து தேவனுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் நாம் தருவதற்கு முன்னமே நம்முடைய தேவைகளை அறிந்திருக்கிறார். நம்மேல் அவருக்கு அதிமான அக்கறை இருப்பதால் நம்முடைய் தேவைகளை சந்திக்கிறார் அதனால் நம்மிடத்தில் கொஞ்சமாக இருந்த போதிலும் அவருக்கு கொடுக்கக் கடவோம்!*

*நீங்கள் ரொம்ப கஷ்டமான சூழ்நிலையில் இருந்த போது கர்த்தர் உங்களுக்கு எப்படி உதவினார் என்பதை எழுந்துங்கள். அதற்காக கர்த்தரை துதியுங்கள். மறுபடியும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உங்கள் வாழ்க்கையில் வரும் போது கர்த்தரை நினைத்து காத்திருங்கள்! தேவனால் எல்லாம் கூடும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிறைய ஆலோசனைகளை எடுத்து நடங்கள், நம்முடைய சொந்த ஆலோசனைகளை கைகொள்ள வேண்டாம்.*

*27 அக்கினியிலிருந்து நம்மை காப்பாற்றும் தேவனுடைய கரம்*

*வேதாகமத்தில் உள்ள தானியேலின் புத்தகம் நம்முடைய மனவுறுதிகளை உறுதியாக்குவதற்கு ஒரு சிறந்த புத்தகமாகும். நீங்கள் இரண்டாவது அதிகாரத்தை படித்தவுடன் தேவனை மகிமைப் படுத்த வேண்டும் என்ற முடிவை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.*

*தானியேல் 3 படியுங்கள்*

*ராஜா நேபுகாத்நேச்சார் ஒரு மிகப்பெரிய விக்கிரகத்தை உருவாக்கினான். இசைக்கருவிகள் வாசித்தவுடன் எல்லோருமே அதை வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அதை பணிந்து கொள்ளாதவர்களை உடனடியாக எரிகிற அக்கினியில் போடும்படி கட்டளையிட்டான். தானியேலின் நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ அந்த கட்டளைக்கு கீழ்படியவில்லை!*

*கோபமடைந்த ராஜா உடனடியாக அவர்களிடம் கேள்விகளைக் கேட்டான். அவர்களை காப்பாற்றிக் கொள்ளும்படி மறுபடியுமாக அந்த விக்கிரகங்களை வணங்கும்படி ஒரு வாய்ப்பை கொடுத்தான். அதுமட்டுமில்லாமல் அதற்கு கீழ்படியவில்லையென்றால் எரிகிற அக்கினியில் போடும்படி கட்டளையிட்டான். "எந்த தேவன் உங்களை என்னுடைய கரத்திலிருந்து காப்பாற்ற முடியும்" என்று அவர்களிடம் கேட்டான். (வசனம் 16-18)*

*ஆனால் அவர்கள் வேறு தேசத்திலிருந்தாலும் கூட தங்களுடைய தேவனாகிய கர்த்தரைத் தவிர வேறு எந்த விக்கிரகங்களையும் வணங்கக் கூடாது என்ற மனவுறுதியுடன் இருந்தார்கள். பாபிலோன் எந்த அளவிற்கு பலசாலிகள் என்று யூதா தேசத்தை சிறைப் பிடித்து செல்லும்போது சாட்சிகளாக இருந்தார்கள்!*

*இப்போது அவர்கள் அதிகாரிகளுடனும் ராஜாவுடனும் தனிப்பட்ட முறையில் தங்களுடைய திறமைகளையும் ஞானத்தையும் கொண்டு நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் மனிதர்களை பிரியப்படுத்தாமல் தேவனை பிரியப்படுத்த வேண்டும் என்ற முடிவினால் எல்லாவற்றையும் இழக்கத் தயாரக இருக்கிறார்கள்.*

*நீங்கள் இந்த சூழ்நிலையில் இருந்தால் எப்படிப்பட்ட முடிவை எடுத்திருப்பீர்கள்? எந்தெந்த சூழ்நிலை உங்கள் முடிவுகளை சமரப்படுத்தியிருக்கிறீகள்? எப்படியெல்லாம் மனிதர்களுக்கு பயந்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்திருகிறீர்கள்? மற்றவர்களிடம் நற்பேர் பெருவதற்காக எப்போதெல்லாம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்திருக்கிறீர்கள்? எதை இழப்பதற்கு பயந்திருக்கிறீர்கள்? உங்கள் வேலை, பதவி உயர்வு, மேலதிகாரியிடம் நற்பெயர் அல்லது குடும்பத்தில், சொத்தின் பங்கிற்காக, நண்பர்கதக்காக?*

*இயேசுவைப் பற்றி உங்கள் நண்பர்களிடம் உடன் வேலைசெய்பவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்காக பயந்திருக்கிறீர்களா? எத்தனை முறை நம்மை எரிகிற அக்கினியில் போடுவேன் என்று பயமுறுத்தியிருக்கிறார்கள்! எந்த அள்விற்கு நாம் சீக்கிரமாக சமரசப்படுத்துகிறோம்?*

*அவர்கள் என்னென்ன மனவுறுதிகளை கொண்டிருந்தார்கள்*

1. *தேவன் அவர்களை அந்த அக்கினியிலுருந்து காப்பாற்ற வல்லவர் என்று நம்பினார்கள்*
2. *தேவன் அவர்களை காப்பாற்றவில்லை என்றால் கூட தேவனுக்கு கீழ்ப்படிய தயாராக இருந்தார்கள்*

*எது அவர்களுக்கு இந்த மனவுறுதியைக் கொடுத்தது?*

1. *அவர்கள் தேவனுடைய வல்லமையை நம்பினார்கள்*
2. *தங்களுடைய ஜீவனைவிட தேவனை அதிகமாக நேசித்தார்கள்*
3. *தேவனை அறியாதவர்களிடம் தேவனைப் பற்றி சொல்வது மட்டுமே அவர்களுக்கு இரட்சிப்பைத் தருமென்று நம்பினார்கள்*

*உங்களுடைய வாழ்க்கையில் தேவன் எந்த அளவிற்கு வல்லமையானவராக இருக்கிறார்?*

*தேவன் உங்களுடைய வாழ்க்கையின் பிரச்சனைகளின் போது தன்னுடைய கரத்தை நீட்டி இரட்சிக்கவில்லை யென்றாலும் அவரை நம்பி அவருக்கு கீழ்ப்படிய தயாராக இருக்கிறீர்களா?*

*வசனம் 19-30 படியுங்கள், அவர்களுடைய மனவுறுதியின் காரணமாக என்ன நடந்தது பாருங்கள்! அந்த நெருப்பை அவர்கள் ஏழுதரம் அதிகமாக கூட்டினாலும் கூட அவர்களை எதுவும் செய்யவில்லை அவர்களை தூக்கிசென்ற சேவகர்களும்கூட எரிந்து விட்டார்கள் ஆனால் அவர்களுக்கு எதுவும் நேரிடவில்லை. ஆனால் அந்த மூன்று பேரும் எந்த ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றப் பட்டார்கள். ராஜாவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது ஏனென்றால் 3 பேருக்கு பதிலாக 4 பேர் எந்த ஆபத்தும் இல்லாமல் அந்த அக்கினியில் சுற்றி வந்தார்கள். அந்த நாங்காவது மனிதன் தேவனுடைய*

*குமாரன் போல் இருந்தார் என்று அந்த ராஜா கூறினான். ஒரு வேளை அது தேவதூதனோ அல்ல்து இயேசுவாகவோ இருக்கலாம் அந்த மூன்று தைரியமான பேரையும் உற்சாகப் படுத்துவதற்காக!.*

*அவர்கள் அந்தப் புருஷனுடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.*

*அதன் பின்பு ராஜா தன் மனதை மாற்றிக்கொண்டு தன்னுடைய தவறை உணர்ந்து உண்மையான வல்லமையான தேவனை வணங்கும்படி தேவனை துதித்தான். வச 28-30*

*அந்த ராஜாவின் மனம் கோபத்திலிருந்து மாறி உற்சாகமைந்தது! தங்களுடைய ஜீவனையும் பாராமல் தேவனைத் தவிர வேறு எந்த தேவர்களையும் வசிபடக்கூடாது என்ற மனவுறுதிக்காக ராஜா அந்த மூன்று பேரையும் பாராட்டினான். அவர்களுக்கு நல்ல பதவிகளைக் கொடுத்து மிகவும் சந்தோஷப்பட்டான் மற்றும் சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோவின் தேவனுக்கு எதிராக பேசுபவர்களை தண்டிக்கவும் ஆணையிட்டான்.*

*நீங்கள் உங்கள் வாழ்க்கையில் தேவனுக்காக உங்கள் உண்மையையும் அன்பையும் காண்பிப்பதற்கு இப்படிப்பட்ட சவால்களை மேற்கொள்ள தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் சீஷராக இருக்க தடையாக இருக்கும் வேலையை விட்டு அர்ப்பணிக்க தயாராக இருக்கிறீர்களா?*

*ஒற்றையர்கள் (திருமணமாகாதவர்கள்) உங்களுக்கு ஏற்ற துணை சீக்கிரம் கிடைக்கவில்லை என்பதற்காக சபைக்கு வெளியே திருமணம் செய்ய முடிவெடுக்கிறீர்களா? அல்லது என்னுடைய குடும்பமானாலும் சரி என்னுடைய பாவமானலும் சரி விட்டுக்கொடுக்காமல் கடைசிவரை வைராக்கியமுள்ள ஒரு கிறிஸ்தவனாக சபையில் திருமணம் செய்ய தயாராக இருக்கிறீர்களா?*

*நாமெல்லோரும் தேவனை முழு இருதயத்தோடு அன்பு செய்து நமக்கு இருக்கும் எல்லாவற்றையும் அவருக்காக விட்டுக்கொடுக்க தயாராக இருக்க வேண்டும், ஏனென்றால் அவர் நமக்காக தன்னுடைய விலைமதிப்பில்லாத சொந்த குமாரனை நம்மை இரட்சிப்பதற்காக கொடுத்திருக்கிறார்.*

*28 தேவனுடைய கரம் உத்தமமானவர்களை நிருபிக்கிறது*

*தானியேல் 6*

*தானியேலும் அவனுடைய நண்பர்களும் பாபிலோனில் இருக்கும் போது மீதியர்கள் மற்றும் பெரிசியர்கள் பாபிலோனை சிறைப் பிடித்து ஆண்டுவந்தார்கள். அந்த ராஜ்ஜியத்தின் ராஜாவும், தானியேலையும் அவனுடைய நண்பர்களையும் அதிகாரிகளாக நியமித்திருந்தான். வசனம் 3ல் பார்க்கும் போது தானியேல் மற்றவர்களைவிட மிகவும் ஞானவானாக இருந்தபடியால் மிகப் பெரிய பதவியில் இருந்தான். உங்களுடன் வேலை பார்ப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தால் எப்படி உணருவீர்கள்? நீங்கள் ஆத்மீகமாக இல்லையென்றால் நிச்சயமாக பொறாமை கொள்வீர்கள். மற்ற அதிகாரிகள் தானியேலைப் பார்த்து பொறாமை கொண்டு வெளியேற்ற நினைத்தார்கள். ஆனால் அந்த பதவியிலுருந்து யாராவது பதவி விலகசெய்ய வேண்டுமென்றால் அவர்கள் ஊழல் செய்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் தானியேலிடம் எதாவது குறை கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள்.*

*வசனம் 4ல் அவர்களால் எந்த குறையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று எழுதியிருக்கிறது. உங்களை சுற்றியிருப்பவர்கள் உங்களை குறித்து அப்படி சொல்வார்களா? அது தான் தேவனை உண்மையாக பின்பற்றுவர்களின் நேர்மைக்கு சோதனையாக இருக்கிறது.*

*இயேசு அப்படிதான் தன்னை சுற்றியிருந்தவர்கள் " என்னிடத்தில் எதாவது பாவத்தை காண்கிறீர்களா" என்று கேட்டார் (யோவான் 8 : 46) எவ்வள்வு முயற்சி செய்தும் யாராலும் அவரை குற்றப்படுத்த முடியவில்லை!*

*அதனால் அவர்கள் தானியேலை குற்றப்படுத்த முடியாது என்பதற்காக வேறொரு வழியை கண்டுபிடித்தார்கள் – அவர்களுக்கு தெரியும் தானியேல் எந்த சூழ்நிலையிலும் தேவனை விட்டுக்கொடுக்க மாட்டான் என்று. அதனால் அடுத்த மூன்று நாட்கள் ராஜாவைத் தவிர வேறு யாரையும் வழிபடக்கூடாது என்ற கட்டளையை போடும்படி ராஜாவிடம் விண்ணப்பம் செய்தார்கள் (வச 7).*

*ராஜாவும் அதற்கு ஒப்புக்கொண்டான். ஆனால் தானியேல் யாருக்கும் பயப்படாமல் தன்னுடைய நம்பிக்கையை விட்டுக்கொடுக்காமல் தன் உயிரையும் பெரிதாக எடுக்காமல் தன் வழக்கத்தின்படியே மூன்று வேளை தேவனிடம் ஜெபித்தான். அப்படிப்பட்ட மனிதற்களுக்காக தேவன் இரங்கி உதவி செய்வாரா! நிச்சயமாக தேவன் பிரியப் பட்டு தன்னுடைய வல்லமையான கரத்தைக் கொண்டு காப்பாற்றுவார்!.*

*தானியேல் சிங்கத்தின் குகையில் போடப்பட்டான். அதனால் ராஜாவும் இரவு முழுவதும் சாப்பிடாமல் தூங்காமல் மிகவும் துயரப்பட்டார்.அதிகாலையில் தானியேல் பாதுகாப்பாக இருக்கிறாரா என்று சிங்கத்தின் குகைக்குச் சென்று பார்த்து பேசினார் (வசனம் 22)*

*தேவனுடைய கரம் எப்படி கிரியை செய்கிறது என்று பாருங்கள் - உத்தமாக நடப்பவர்களுக்கு எவ்வளவு பெரிய எதிர் சக்திகள் இருந்தாலும் தேவனுடைய கரம் அவர்களை காப்பாற்ற தயாராக இருக்கிறது.*

*நீங்கள் எப்போதாவது தேவனை சந்தேகப்பட்டு உங்கள் நம்பிக்கையை சமசரப்படுத்தி இருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கையை எப்படி வாழ முடிவு செய்யப் போகிறீர்கள்?*

*29 தேவனுடைய கரம் சீர்த்திருத்தி நம்மை அவரிடமாக சேர்க்கிறது*

*எரேமியா 25 படிக்கவும்*

*யூதாவின் ஜனங்கள் தேவனுடைய பல எச்சரிக்கைகளுக்கு பின்பும் தொடர்ந்து பாவம் செய்தார்கள். அவர்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டு பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு வரவழைத்த தேவனை மறந்து போனார்கள். தேவனை விட்டு விலகின பின்பு தேவர்களை வழிபட தொடங்கினார்கள். அவர்களுக்காக தேவன் ஏசாயா, எரேமியா போன்ற பல பெரிய தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களை அவரிடம் மறுபடியும் வரும்படி செய்தார். அவர்களிடம் அவர் பல ஆண்டுகளாக மனந்திரும்படி மன்றாடியும் அவர்கள் எச்சரிக்கைகளுக்கு செவிகொடுக்க வில்லை.*

*அவர்கள் மனந்திரும்ப மறுத்த காரணத்தினால் அவர்கள் மேல் அவர் நியாயத்தீர்ப்பை வரப்பண்ணினார். அவர்கள் பாபிலோன் நாட்டிற்கு சிறைபிடித்து செல்லப் படுவார்கள் என்று கூறியிருந்தார். ஏசாயா மற்றும் எரேமியாவின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றி, கி.மு 586ம் ஆண்டு பாபிலோன் நாட்டினர் தேவாலயத்தை அழித்து மக்களை கொன்று பலரை சிறைப்பிடித்து சென்றார்கள்.*

*தேவன் பொறுமையானவர் மற்றும் இரக்கமுள்ளவர் அதே நேரத்தில் நீதியானவரும் கூட. அவர்களுக்கு அவர் தண்டனை கொடுத்தாக வேண்டியதாக இருக்கிறது. ஆனால் அவருடைய தண்டனை அந்த ஜனங்களை அவரிடமாக திரும்ப செய்வதற்காக தான் இருந்தது. ஆனால் அவர்கள் மறுபடியுமாக 70 ஆண்டுகளுக்கு பிறகு சிறைப்பிடிப்பிலிருந்து அவரிடமாக திரும்புவார்கள் என்றும் கூறியிருந்தார் (எரேமியா 25:11), அந்த முழு தேசமும் எதற்கும் பயன்படாத பாழ்நிலமாக மறியாது. அந்த ஜனங்கள் தொடர்ந்து பாபிலோனின் ராஜாவிற்கு சேவை செய்தார்கள். எரேமியா 40 ஆண்டுகளுக்கு முன்பே அதை தீர்க்கதரிசனமாக கூறியிருந்தார்.*

*தேவன் அவரது மக்களை அவரிடமாக திரும்ப செய்வதற்கான திட்டத்தை முன்கூட்டியே செய்திருந்தார். ஏசாயாகி.மு700 ஆண்டு திர்க்கதரிசனம் கூறினார் ஆனால் கி.மு 536ம் ஆண்டு நிறைவேறியது.*

*ஏசாயா 44;28, 45;13*

*எரேமியா 29;10-14*

*எஸ்றா 1ம் அதிகாரத்தில் படிக்கும் போது கோரேஸ் என்னும் ராஜா யூதா ஜனங்களை தேவனுடைய ஆலயத்தை கட்டும் படி எருசலேமிற்கு 70 ஆண்டுகளுக்கு பிறகு அனுப்பினான். ( இந்த எழுபது ஆண்டுகள் என்பது யூதா ஜனங்கள் சிறைப்படித்து சென்ற போது தானியேலும் அவனுடைய நண்பர்களும் பாபிலோனில் கி.மு 605-536 இருந்த காலமாகும்)*

*தேவனுடைய கரம் அவர்கள் பாவம் செய்யும் போது சீர்த்திருத்தவும் மறுபடியும் தேவனிடமாக சேர்ப்பதற்காக கிருபையும் அன்பையும் காண்பிக்கிறதாக இருக்கிறது. நாமும் கூட தேவன் எந்த அளவிற்கு தேசங்களின் மேல் அதிகாரமுடையர் என்பதையும் எப்படி அவர்களை சீர்த்திருத்தி அவரிடமான திரும்ப செய்கிறார் என்பதையும் பார்க்க முடியும். அதே நேரத்தில் அவர் எந்த அளவிற்கு தன்னுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவர் என்பதையும் அவர் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது என்பதையும் பார்க்க முடிகிறது.*

*சீர்த்திருத்துதலை எப்படி ஏற்றுக் கொள்கிறீர்கள்? தேவனுடைய சீர்த்திருத்துதலுக்கு உங்களுடைய பதில் என்ன?*

*உங்கள் கடந்த கால வாழ்க்கையில் எப்படி சீர்த்திருத்துதலை எப்படி ஏற்றுகொண்டீர்கள்?*

*தேவன் அந்த நேரத்தில் எப்படி உங்களை அவரிடமாக திரும்ப செய்தார்?*

*30 தேவனுடைய கரம் மதில்களை வெறும் 52 நாட்களில் கட்டியெழுப்பும்*

*நெகேமியா 1-2 அதிகாரங்களை படிக்கவும்*

*எஸ்றா ஏற்கணவே ஆலயத்தை கட்டுவதற்காக செருபாபேலையும் யோசுவாவையும் அழைத்துக் கொண்டு எருசலேமிர்கு சென்றுவிட்டார். சில ஆண்டுகளுக்குப் பிறகு நெகேமியாவும் கி.மு 445ம் ஆண்டில் ராஜா அர்த்தசாஷ்டாவிற்கு பானபாத்திரகாரராக வேலை செய்தார்.*

*அந்த காலத்தில் ராஜாக்களை உணவில் விஷம் வைத்து கொன்று விடுவார்கள். அதனால் மிகவும் நம்பிக்கையான நபர்களையே பானப்பாத்திரக்காரராக நியமிப்பார்கள் நெகேமியா மிகவும் நம்பிக்கையான நபராக இருந்தார்.*

*நெகேமியா 2ல் அப்பொழுது ராஜா நெகேமியாவைப் பார்த்து: நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது அவர் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றான்.*

*அப்படிப்பட்ட வேண்டுதல் சதியாகக்கூட கருதப்படலாம் அதனால் அவர்கள் பாபப்பாத்திரகாரரை கொலை செய்யவும் படலாம்! ராஜாவினடத்தில் அப்படிப்பட்ட விண்ணப்பம் கேட்பது மிகவும் சவாலான செயலாக இருக்கிறது. நெகேமியா பயந்த போதும் அதற்காக ஜெபம் செய்ததால் தேவன் ராஜாவின் இருதயத்தை நகர்த்தினார்.*

*நெகேமியா தொடர்ந்து அதோடு நிறுத்தாமல் மற்ற நாடுகளின் வழியாக பாதுகாப்பாக செல்வதற்காக ராஜாவிடம் கடிதங்களையும் வாங்கி சென்றார். மற்றும் அந்த நாட்டின் காடுகளுக்கு அதிகாரியாக இருந்த ஆசாபிடம் கதவுகள், ஆலயத்தின் வாசல்கள் அவர் தங்கும் இடத்திற்காக மற்றும் மதில்களை கட்டுவதற்காக மரங்களையும் பெற்றுக் கொள்ள கடிதம் வாங்கினார்.*

*தேவனுடைய கிருபையான கரம் என்மீது இருந்ததால் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்று எழுதியிருந்தார் (வசனம் 8). கதை அதோடு முடியவில்லை நெகேமியா மிகவும் நேர்மையானவர் என்ற காரனத்தினால் ராஜா அவரை பாதுகாக்க சேவகர்களையும் அனுப்பினார்.*

*அசீரியாவின் ராஜாவாகிய கோரேஸ் இந்த அளவிற்கு தன்னுடைய ஊழிக்காரனான நெகேமியாவுக்கு உதவினார் என்பதை கற்பனை செய்ய முடிகிறதா? தேவனுடைய கரம் நம்மீது இருந்தால் எதுவுமே முடியாது இல்லை! எதனால் தேவனுடைய கரம் நெகேமியாவின் மேல் இருந்தது என்பதை யோசித்துப் பாருங்கள்! நெகேமியா தேவனுடைய மகிமைக்காகவும் கனத்திற்காகவும் தான் இதையெல்லாம் செய்தார் அதனால் தான் தேவனுடைய கரம் அவர்மேல் இருந்தது என்று நான் விசுவாசிக்கிறேன். நாம் எப்போதல்லாம் தேவனுடைய மகிமைக்காக காரியங்கள் செய்ய நினைக்கிறோமோ தேவனுடைய கரம் நம்மோடு இருக்கிறது. வேதாகமத்தில் அதை போல அதிகமான எடுத்துக்காட்டுக்களை காணமுடியும்.*

*அதன் பின்பு நெகேமியா பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அற்புதமாக திட்டமிட்டு அந்த சுவற்றை கட்டினார் என்பதை அதிகாரம் 3ல் பார்க்க முடியும். அந்த வேலை மிகவும் அற்புதமாக் இருந்தது அதை கட்டியவர்கள் திறமையான கலைஞர்கள் கிடையாது வேறு தொழில்கள் செய்கிறவர்களாக இருந்தனர் ஆனாலும் தங்களுக்காக கொடுக்கப் பட்ட பகுதியை மிகவும் அற்புதமாக கட்டினார்கள்.*

*மனிதர்களால் வெறும் அவ்வளவு பெரிய மதிலைக் கட்டுவது 52 நாட்களில் கட்டி முடிப்பது சாத்தியமில்லாத ஒரு காரியாம் தான்! அவர்களுடைய எதிரிகளும் புரிந்து கொண்டார்கள் அந்த தேவனால் உண்டானதென்று. அந்த வேலை மிகவும் சாதரணமாக இருக்கலாம் ஆனால் அது மூலமாக தேவனுக்கு கனத்தையும் மகிமையும் செலுத்தினார்கள். அவர்களை சுற்றியிருந்த மற்ற ஜனங்களும் பரலோகத்தின் தேவன் தான் அவர்களுக்கு உதவி செய்தார் என்று புரிந்து கொண்டார்கள். அதனால் மற்ற தேசங்களும் அவர்களுக்கு பயந்தார்கள் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணிய தேசத்திற்கு அழைத்து கொண்டு வந்த போதும் அப்படி தான் நடந்தது. தேவனுடைய கரம் எப்படி அவர்களை செங்கடலிருந்து இரண்டாக பிளந்து நடக்க செய்தது, எரிகோ மதிலை தகர்த்தது ஆகியவற்றை பார்த்து தேவனுடைய கரத்திற்கு விரோதமாக எந்த பலமுள்ள நாடும் எதுவும் செய்ய முடியாது என்பதை புரிந்து கொண்டார்கள்! அதே பயம் தான் எருசலேமின் மதில்களை கட்டும் போதும் அந்த தேசங்களுக்கு இருந்தது.*

தேவனுடைய நாமம் தூஷிக்கப் படும்போதும் மகிமை செலுத்தாதபோதும் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? அதற்காக துக்கப்படவோ அல்லது ஆதங்கப் படவோ செய்வீர்களா? அப்படியில்லையென்றால் நீங்கள் தேவனை அன்பு செய்யவும் அவரை கனப்படுத்தவும் இல்லையென்று தான் அர்த்தம்.

நீங்கள் தேவனை மகிப்படுத்த விரும்புகிறீர்களா? அதற்காக என்ன செய்யப் போகிறீர்கள்?

தேவனுடைய வல்லமையான கரம் உங்களுக்கு உதவி செய்ய ஜெபிக்கிறீர்களா? எப்படி?

நியு யார்க் சபையில் 2011ம் ஆண்டு தேவனை மகிமைப் படுத்தவதற்காக 100 நாட்களில் 100 பேரை ஆதாயப்படுத்த முடிவு செய்தார்கள். தேவன் அவர்களுடைய விசுவாசத்தை ஆசீர்வதித்து 87 ஞானஸ்நானம் மற்றும் சபையிலுருந்து பிரிந்து சென்ற 16 பேர்களை மறுபடியுமாக சேர்த்தார். மொத்தம் 103 நாட்களில் 103 பேர்கள் சேர்க்கப் பட்டனர்.

அதே போல தமிழ்நாட்டிலுள்ள திருச்சி சபையில் பல ஆண்டுகளாக முழுநேர ஊழியர்கள் இல்லாமல் இருந்தார்கள். ஆண்ட்ரூ மற்றும் ரேச்சல் அந்த சபைக்கு சென்றார்கள். ஆண்ட்ரூ மிகவும் வேலை நிறைந்த வியாபாரத்தில் இருந்தார். ஆனாலும் அவர்கள் அந்த சபையை வழிநடத்தினார்கள், அவர்கள் அங்கே செல்லும் போது 50சிஷர்கள் இருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து சபையில் 100 பேர் இருக்க வேண்டும் என்று ஜெபித்தார்கள். இப்போது சபையில் மொத்தம் 120 சீஷர்கள் இருக்கிறார்கள், எந்த ஒரு முழு நேர ஊழியர்கள் இல்லையென்றாலும் இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அவர்களுக்கு IIT என்ற மிகச் சிறந்த பல்கலைகழத்தில் campus ministry இருக்கிறது!

உங்களுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தேவனுடைய வல்லமையான கரம் கிரியை செய்ய விரும்புகிறீர்களா? தேவனை மகிமைப் படுத்துவதற்காக இலக்குகளை நிர்ணயித்து தேவனுடைய கரம் அதை நடத்த வேண்டும் என்பதற்காக அதற்காக ஜெபியுங்கள்.

நெகேமியாவைப் போல் தேவனுடைய கரத்தின் கிரியைகளை மற்றவர்களிடம் பகிந்து கொண்டு அவர்களும் தங்கள் விசுவாசத்தில் வளர உதவுங்கள்!